# ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உறவினர்கள் சொத்துக்களை வெளிப்படுத்த


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 199

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 14 ஜ: ஆகிர் 16 சனிக்கிழமை [30-8-69]


# சின்ன வெங்காய உத்தரவாத விலையில் விரைவில் மாற்றம்

## மீண்டும் ஏற்றுமதி ஆரம்பம்

## உருளைக்கிழங்கு உற்பத்தி விஸ்தரிப்பு இப்போது இல்லை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலையில் விரைவில் மாற்றம் ஏற்படவிருப்பதாகத் தெரிய வருகிறது. அதே சமயம் வடபகுதியில் உருளைக்கிழங்குச்செய்கை மேலும் விஸ்தரிக்கப் படமாட்டாதென்றும் அறியப்படுகிறது.

தினசரி மூவாயிரம் அந்தர் சின்ன வெங்காயம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆவணி மாதத்தில் எவ்வளவு வெங்காயம் ஏற்றுமதி செய்யமுடியுமென்பதற்கான விபரங்களை சென்ற ஜூலை மாத இறுதியில் கூட்டுறவு மொத்தவிற்பனவு இலாகாவினர் வட பகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தைக் கேட்டிருந்தனராம். இதன்படி அவர்களும் இந்த பட்டியலை அனுப்பியிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய கட்சி பற்றி திரு. சுந்தரலிங்கம் தெரிவிக்கும் அபிப்பிராயம்

யாழ்ப்பாணம், சனி

'வெஸ்ட் மின்ஸ்டர்' சட்டத்தை தழுவிய அரசமைப்பு சட்டமுறை மாற வேண்டுமென்று 1955-ம் ஆண்டில் ஆட்சி மன்றத்தில் நான் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்திருந்தேன். அதை அப்பொழுது தமிழ் எம். பி.க்கள் ஆதரித்திருந்தால் இன்று தமிழர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது''

இவ்வாறு வவனியா முன்னாள் எம். பி.யும் ஈழத்தமிழர் முன்னணித் தலைவருமான திரு. ஸி. சுந்தரலிங்கம் கூறினார்.

நேற்றுமுன்தினம் தீவுப்பகுதி எம், பி. திரு. வி. நவரெத்தினம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கழக தலைமை உரையில் தீவுப்பகுதி எம். பி. 'வெஸ்ட் மின்ஸ்டர்' அரசமைப்பு முறை மாறவேண்டு திரு. நவரெத்தினம் இப்போதுதான் உணர்ந்துள்ளார் என்று கூறினார்,

தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட திரு நவரெத்தினம் எனது கருத்தின் உண்மையை 14 வருடங்களுக்கு பின்னர் தான் உணர்ந்துள்ளார் என்றால், மற்றவர்களுக்கு இன்னம் அத்தனை வருடங்கள் செல்லுமோ என்றும் அவர் மேலும் கூறினார்

அவர் மேலும் கூறியதாவது:

''தமிழ்த் தலைவர்களாயிருப்பவர்களுக்கு பெருந்தன்மையான மனப்பான்மை வேண்டும். நான் தான் தலைமை தாங்கவேண்டும், மற்றவர்களின் தலைமையில் நான் பணிபுரிய மாட்டேன் என்ற மனோபாவம் மாறினால் தமிழர் நிச்சயம் சுயாட்சி தமிழரசு காண்பர், நாம் சுதந்திரமாக வாழவேண்டுமானால் இலங்

## விரைவில் மசோதா

### பிரதமர் டட்லி தகவல்

கொழும்பு, வெள்ளி

ஆட்சிமன்ற உறுப்பினரும் அவர்களது உறவினர்களும் வருடாவருடம் தமது சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் மசோதா விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இத்தகவலை பிரதமர் டட்லி இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

ஆட்சிமன்ற உறுப்பினர்களும், உறவினர்களும், செனட்டர்களும் தங்கள் சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும் என்று கோரும் சட்டம் இலங்கையில் கொண்டுவரப்படவேண்டும் என்று ஹபரதுவ எம். பி. திரு. பிறின்ஸ் குணசேகரா சபையில் கேட்டுக்கொண்டார்.

''கவர்னர் ஜெனரல் பதவியை ஒழித்து விட்டு ஜனாதிபதி பதவியை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் எப்போது முன்வரப்போகிறது''? என்று ஹரதுவப் பிரதிநிதி திரு. பிரின்ஸ் குணசேகரா இன்று ஆட்சிமன்றத்தில் கேட்டார்.

ஆட்சிமன்றம் இன்றுகாலை கூடியபோது அது குழுநிலையில் மாறிவரவு:செலவுத் திட்டத்தை அம்சம் அம்சமாகப் பரிசீலனை செய்தது.

கவர்னர் ஜெனரல் இலாகா மீதான செலவினங்கள் பரிசீலனை செய்யப்படுகையிலேயே திரு. பிரின்ஸ் குணசேகரா மேற்கண்டவாறு கவர்னர்ஜெனரல் பதவியை ஒழிப்பதற்கு அரசாங்கம் எப்போது நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று கேட்டார்'

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன இதற்கும் பதிலளித்துப்பேசுகையில், கவர்னர்ஜெனரல் பதவியை ஒழித்து ஜனாதிபதி பதவியை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க மாட்டேனென்கிறார்களே என்று சலித்துக்கொண்டார்.

இதன்பின் பிரதம மந்திரி இலாகாவின் மான்யம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தவிவாதத்தில் திரு. பிரின்ஸ் குணசேகரா பேசுகையில் சமஷ்டிக்கட்சியுடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு ஆட்சிபீடத்திலமர்ந்த இந்த அரசாங்கம், ஆளும் கட்சியிலிருந்து சமஷ்டிக்கட்சி வெளியேறிய பின்னரும் அந்த இரகசிய ஒப்பந்தம் பற்றி வெளியிடுவதற்கு ஏன் தயங்குகிறது? என்று கேட்டார். 1966-ம் ஆண்டில் ஒரு பௌத்தபிக்கு உயிரைப் பலியிடுவதற்கு இந்த இரகசிய ஒப்பந்தமே காரணமாக இருந்ததென்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் தமிழரசுக் கட்சிக்கும் பிரதமருக்குமிடையில் இரகசிய ஒப்பந்தமில்லையென்றும் பிரதமருடன் ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்ட போதினும் தமிழ் இனத்துக்கு உரிமைகள் கிடைக்காததால் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேற நேர்ந்த தென்றும் சொன்னார் 1966-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது ஓர் ஏமாற்று வித்தையாகவே தோன்றுகிறதென்றும் திரு. இரத்தினம் கூறினார்.

இந்த நாட்டில் வாழும் ஈரின மக்களையும் ஒற்றுமைப் படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு பிரதமர் உறுதி கொண்டிருந்தாலும், இதற்காக அவர் தமிழரசுக் கட்சியினருக்கு வாக்குறுதி அளித்திருந்தாலும் அதை நிறைவேற்றுவதற்று அவரிடமும் உறுதியைக்காண வில்லை; அவருக்குப் பக்கபலமும் இல்லை என்னும் திரு. இரத்தினம் சொன்னார்.

மாவட்டசபைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நாட்டைப் பிரிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் வந்ததல்லவென்றும் நிர்வாகத்தையும் அதிகாரத்தையும் பரவலாக்கி நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றே கொண்டு வரப்பட்டதென்றும் அவர் சொன்னார்.

பிரதமர் டட்லி பேசுகையில், மாவட்டசபை மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக் காரணமாகவே கைவிடப்பட்டதாகவும் இதற்கு எமது கட்சி அங்கத்தவர்கள் காரணமில்லை என்றும் கூறினார்.

திரு, பெர்னாட் சொய்சா பேசுகையில் தொலைபேசிப் பேச்சுக்களை பிரதமர்ஒட்டுக் கேட்பதாகத் தாங்கள் சொல்லவில்லையென்றும்எஜமானர்களை விட அதிக விசுவாசமாக நடந்து கொள்ளும் அரசாங்க ஊழியர் சிலரே இவ்வாறு நடந்து கொள்வதாகவும் அவர் சொன்னார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் திரு டட்லி ''டெலிபோன் ஒட்டுக் கேட்பது சம்பந்தமான புகார்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும் என்றும் இதனை மகாதேசாதிபதியின் ஆலோசனையுடன் செய்து கொள்ளலாம் என்றும் கூறினார் நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு இதற்கு உடனடியாக நடவடிக்கை வேண்டுமென்றும் சொன்னார் ஒட்டுக் கேட்பதாகக் கூறப்பட்டபுகாரில் சம்பந்தப்பட்டவர் சபையின் அங்கத்தவரில்லை என்றும் அவர் கூறினார்

பல்கலைக்கழகத்தில் இராணுவத்தினருக்கும் மாணவருக்குமிடையே ஏற்பட்ட கலவரத்தில் மாணவர்கள் தவருக நடந்து கொண்டதாக சபையில் ஏற்கனவே கூறியிருந்த வார்த்தையைப் பிரதமர் வாபஸ் பெறுவதாகக் கூறினார்

ஹபரதுவ எம். பி. பேசுகையில், ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம் கொண்டு வரவேண்டும் என்று கோரினார். தொடர்ந்து பேசுகையில் 1966-ம் ஆண்டு ஜனவரிமாதம் 8-ந் திகதி நடைபெற்ற சம்பவம் சம்பந்தமாக விசாரணைக்கமிஷன் அறிக்கையை சபையில் தாக்கல்செய்ய மறுத்தால் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரவேண்டி ஏற்படும் என்றும் எச்சரித்தார்.

## யாழ். மாநகரசபைக் கூட்டம்

## வட பகுதி அசைஸ் விசாரணை

## வவனியா கொலைவழக்கு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி எம். பி. திரு. வி. நவ ரெத்தினம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கழக தலைமை உரையில் தீவுப்பகுதி எம். பி. 'வெஸ்ட் மின்ஸ்டர்' அரசமைப்பு முறை மாறவேண்டுமென்று கூறுகிறார்.

14 வருடங்களுக்கு முன்னர் தாம் சமர்ப்பித்த பிரேரணையின் உண்மையை ... தலைமை தாங்கவேண்டும், மற்றவர்களின் தலைமையில் நான் பணிபுரிய மாட்டேன் என்ற மனோபாவம் மாறினால் தமிழர் ... சுயாட்சி தமிழரசு காண்பார், நாம் சுதந்திரமாக வாழவேண்டுமானால் இலங்கையில் தற்போதுள்ள அரசமைப்புமுறை மாறவேண்டும், தமிழருக்கு சுயாட்சி கொண்ட தமிழரசு வேண்டும்'' என்றார்.

## வட்டாரம் தோறும் சனசமூக நிலையங்கள் நிறுவவேண்டும்

**-- யாழ். நகர முதல்வர்**

யாழ்ப்பாணம், சனி

''பிற்போக்குச் சக்திகளில் இழுத்துச் செல்லப்படும் வாலிபர்களுக்கு முற்போக்கு எண்ணங்களையும், அறிவு வளர்ச்சியையும் ஏற்படுத்த இதுபோன்ற சனசமூக நிலையங்கள் வட்டாரங்கள் தோறும் நிறுவப்படவேண்டியது அவசியமாகும்.''

யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

ஆரியகுளம் சந்தியில் முற்போக்கு வாலிபர் சங்க வாசிகசாலைக்கு நேற்று நண்பகல் அத்திபாரக்கல் நாட்டப்பட்டது. அத்திபாரக் கல்லை நாட்டி வைத்த மாநகரசபை அங்கத்தவர் திரு. ரி. கே. இராசரத்தினம் இங்கு பேசுகையில் இக் காணியை வழங்கியதற்காக நகரமுதல்வருக்கு நன்றிதெரிவித்தார்.

நகரமுதல்வர் திரு. எஸ் நாகராசா மேலும் பேசுகையில் இவ்வட்டார அங்கத்தவரின் விடாமுயற்சியாலேயே இவ் வாசிகசாலை கட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதுபோன்ற முயற்சிகளை மற்ற அங்கத்தவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (கா. நி)

# பரீட்சை இலாகா

## ஜி. சி. ஈ. மாணவர் படும்பாடு

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் வெளியான ஜி சி ஈ சாதாரண பரீட்சையில் 5 திறமைச் சித்திகளுடனும், 2 அதிவிசேஷ சித்திகளுடனும் சித்தியெய்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த மாணவர் ஒருவருக்கு தற்போது வேறுவிதமான முடிவு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

தமிழ்பாஷையில் சித்தி எய்தவில்லை என்று' குறிப்பிட்ட மாணவன் பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு தமது பரீட்சை முடிவுகளில் தமக்குச் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்திருந்தார் தற்போது பரீட்சைப்பகுதி அனுப்பியுள்ள முடிவுகளில் திறமை சித்திபெற்றிருந்த இரசாயனவியல், உயிரியல் ஆகிய இரு பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது அதே வேளையில் சித்தியடையவில்லை என அறிவிக்கப்பட்டிருந்த தமிழ் பாஷையில் சாதாரண சித்தியெய்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக்கல்லூரி பழைய மாணவரான ரி செல்வநாயகம் என்ற மாணவனுக்கே இந்த முடிவு கிடைத்தது முன்னர் அனுப்பப்பட்ட முடிவுகளை திருப்பி அனுப்பும்படி கோரப்பட்டுள்ளார் இப்படியான மற்

## 'புத்தகங்களுக்கும் வரி அறவிடுவதுவெட்கக்கேடானது'

### உயர் கல்விச்சபைத் தலைவர் கூறுகிறார்

கோட்டை, வியா.

''அறிவின் கருவிகளான புத்தகங்களுக்கும் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட இறக்குமதி மதிப்பீட்டு வரித் திட்டம் வரி விதித்திருப்பது மிகவும் வெட்கக்கேடான விடயமாகும். ஆசியாவிலேயே இலவசகல்வியை அளிக்கும் ஒரேயொரு நாடான நமது நாட்டில் இப்படியான முறையிருப்பது வருந்தத்தக்கது புத்தகங்களுக்கு வரிவிதிப்பு என்பது அறிவுக்கு வரி விதிப்பதுபோன்றதாகும்''

இவ்வாறு தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி பி. மலலசேகரா தெரிவித்தார். கொழும்பு வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தாரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'பீக்ஸ் திட்டமும் நூல்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கமும்' என்னும் பொருள் பற்றி டாக்டர் மலலசேகரா பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் நியாயமான விலை கொடுத்துப் புத்தகங்களை வாங்கமுடியாமல் இருக்கும்

யாழ். மாநகரசபைக் கூட்டம்:

# புல்லுக்குளம் விரைவில் நீச்சல்தடாகமாகும்; "யாழ்.நங்கை" சிலைக்குபெயரிட்டது யார்?

(நமது காரியாலய நிருபர்)

யாழ்ப்பாணம். சனி

நாட்டிலுள்ள சகலஇந்து ஆலயங்களையும் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டுக்காகத் திறந்து விட வேண்டுமென்று நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் பல அங்கத்தவர்களும் வற்புறுத்திப்பேசினார்கள்.

சமூகக் குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தி சிறுபான்மைத் தமிழரின் சமூக கல்வி, பொருளாதார கலாச்சார வளர்ச்சியில் நடக்கும் பாகுபாட்டை நீக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென பிரதமரைக் கேட்ப

தென திரு எஸ் ஜே அன்ரனி கொண்டுவந்த தீர்மானத்தின் மீதும், சகல இந்து ஆலயங்களையும் திறந்துவிடுமாறு ஆலய தர்மகர்த்தாக்களைக் கேட்க வேண்டுமென திரு அ விசுவநாதன் கொண்டுவந்த தீர்மானத்தின் மீதும் பேசுகையிலேயே அங்கத்தவர்கள் பலரும் இவ் வேண்டுகோளை வலியுறுத்திப் பேசினார்கள்.

இப் பிரேரணை மீது திரு அ விசுவநாதன் பேசுகையில் அடுத்ததாகக் கூட்டரசாங்கமே பதவிக்கு வரும் என்றும் அப்போது சகல இந்துக் கோயில்களும் பலாத்காரமாகத் திறக்கப்படும் என்றும் சொன்னார்.

**ஏ. போல்ராஜா:** --திரு விசுவநாதன் பேசியதைப்பார்க்கும் போது அவர் அடுத்த அரசாங்கம் கூட்டரசாங்கமே என்று கனவு கண்டவர் போல இருக்கிறது.

**மேயர்:-** அது கனவல்ல பகற்கனவு கனவாகவே பல வருடம் செல்லும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பல அங்கத்தவர்களும் பலாத்காரம் என்ற சொல் பாவிக்கப்பட்டதைக் கண்டித்துப்பேசினார்கள்

**கே எஸ் நடராஜா:-** தாழ்த்தப்பட்ட மக்களை ஆயுதமாகக் கொண்டு அரசியல்வாதிகள் முன்னேறுகின்றார்கள் இதில் இடதுசாரிகள் தான் முன்னணி வகிக்கிறார்கள் கோவிலுக்குப் போகும் போது சிறுபான்மையினர் ஏன் சுலோகங்களுடனும், கோஷங்களுடனும், கொடிகளுடனும் போகவேண்டும்

**ஏ ஜி ராஜசூரியர்:-** ஆலயங்களைத் திறப்பதற்கு முன்னர் சிறுபான்மையரின் கல்வி வசதியில் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தக் கூடாதா?

**என் மார்க்கண்டு;-** இடதுசாரியினர்தான் இதில் கவனம் செலுத்துவதாகக் குற்றம் சாட்டுவது கூடாது இன்றுதமிழரசினரும்தமிழ்க் காங்கிரசினரும்ஏதோமுயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் ஆனால் ஒன்றையும் காணவில்லை

**அல்பிரட் துரையப்பா:-** தமிழ் காங்கிரஸ் அப்படி முயற்சி எதுவும் எடுக்கவில்லை

**என் ரீ செல்லத்துரை:-** அன்றிலிருந்து இன்றுவரை சிறுபான்மையினத்துக்காக போராடும் ஒரு கட்சி தமிழரதான் மற்றவைகள்முதலைக்கண்ணீர் வடிப்பவை

**வி சிவசுப்பிரமணியம்:-** சிறுபான்மைத்தமிழர் பிரச்னைகளில் இடதுசாரிகள் தலையிடுவது வெள்ளாடு நனையுதென்று ஓநாய் அழுதகதை தான் சீனகம்யூனிஸ்ட்டுகளும், இடதுசாரிகளும்எமது கஷ்டங்களைத் தீர்ப்பதாக நடித்து எமக்குப் பெற்றுத் தந்தவைகள் பௌத்த பாடசாலைகளும் சிங்களப் போதனமொழியும் தான் இனியும் இவர்களை நம்ப முடியுமா?

உதவி மேயர் திரு ஆ. துரைராஜசிங்கம், மேயர் திரு. எஸ். நாகராஜா ஆகியோரும் இப் பிரேரணைகளை ஆதரித்துப் பேசிய பின்னர் இரண்டு பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேறின.

பொதுசன நூல் நிலைய முகப்பிலிருந்து அகற்றப்பட்ட சிலைக்கு ''யாழ். நங்கை'' என்ற பெயரை வைத்தது என்ற பிரச்னையும் சபையில் பல நிமிடங்கள் சிரிப் பொலியுடன் கலகலப்பை உண்டு பண்ணியது

அது யாழ் நங்கைதானா என்று சோதிக்க வேண்டுமென்றும், யாழ் நங்கைதான் என்றால் அதனை சுப்பிரமணியம் பூங்காவில் பாதுகாப்பில்லாமல் வைக்கக் கூடாதென்றும் பல அங்கத்தவர்களும் சொல்ல அச் சிலையை யாழ்ப்பாணம் நூதன சாலையில் வைக்க வேண்டுமென வைத்தியர் அ. நடராசா ஆலோசனை கூறினார். இறுதியில் அச் சிலையை சுப்பிரமணியம் பூங்காவில் நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது.

விளையாட்டு அமைச்சிடம் நிதி உதவி பெற்று யாழ்ப்பணத்தில் நீச்சல் தடாகம் ஒன்று அமைப்பதென திரு. என். ரி. செல்லத்துரையால் கொண்டு வரப்பட்ட தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

ஆரிய குளத்தையே நீச்சல் தடாகமாக்க வேண்டுமென திரு. ரி. கே ராசரத்தினம் தெரிவித்தார். புல்லுக் குளத்தையே நீச்சல் தடாகமாக்க வேண்டுமென பல அங்கத்தவர்களும் தெரிவித்த போது, இத் திட்டத்தை முதலில் கொண்டு வந்தவர் திரு. அல்பிரேட் துரையப்பாவான படியால் நீச்சல் தடாகத்துக்கு அவரது பெயரே வைக்கவேண்டுமென திருவாளர்கள் கே வி தெய்வேந்திரம், தம்பு கந்தையா, ஏ ஜி ராஜசூரியர் ஆகியோர் சபையில் தெரிவித்தனர்.

நூல் நிலையக் கோபுரங்கள், ஏனைய கட்டிட வேலைகள், புல்லுக்குளம் வீதியிலுள்ள பாலம் ஆகியன கட்டியது சம்பந்தமாக எவ்வளவு தொகை செலவிடப்பட்டதென்றும், அவை சரியாகச் செய்யப்பட்டனவா என்றும் விசாரணை நடத்திப் பரிசீலனை செய்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க மாநகர ஆணையாளர், கணக்காளர், 'இன்டர்னல் ஓடிட்டர்' ஆகிய மூவரைக் கொண்ட குழுவொன்றும் தெரியப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களும் இங்கு ஏகமனதாக நிறைவேறின:-

யாழ்ப்பாண நகரத்தில் குடிசனம் நெருக்கமாக உள்ள பகுதிகளான குருநகர், பாஷையூர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் கொழும்பு வீடமைப்புத் திட்டம் போன்ற மாடிகள் கொண்ட வீடமைப்புத் திட்டம் ஒன்றைச் செயல் படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்பது.

சந்திரனில் அடியெடுத்து வைத்த மூவரையும் பாராட்டுவதோடு அவர்கள் இலங்கைக்கு வரும்போது அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துக் கௌரவிப்பது.

யாழ். பொதுசன நூலக முகப்பிலிருக்கும் அதன் பெயரை முதலில் தமிழிலும், பின்னர் ஆங்கிலத்திலுமாக மாற்றுவது. (கா. நி)

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. இராஜசேகரம் வியாழக்கிழமை இரவு காலமானார். அவரின் ஈமைக் கிரிகைகள் இன்று நடைபெறும்:

இவர் சென்ஜோன்ஸ் கல்லூரியின் அதிபராகுமுன்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றினார்.

ஒரு சம்பவம் ஒன்று 3 ம் பக்கத்தில் எது சரி? என்ற தலையங்கத்துடன் வெளியாகியிருக்கிறது

நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றே கொண்டு வரப்பட்டதென்றும் அவர் சொன்னார்.

பிரதமர் டட்லி பேசுகை

... சாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரவேண்டி ஏற்படும் என்றும் எச்சரித்தார்.

... கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. ஆவணி மாதத்தில் எவ்வ ... ஜூலை மாத இறுதியில் கூட்டுறவு மொத்தவிற்பனவு இலாகாவினர் வடபகுதி ... அவர்களும் இந்த பட்டியலை அனுப்பியிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இதன்பின் பிரதம மந்திரி இலாகாவின் மான்யம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தவிவாதத்

வட பகுதி அசைஸ் விசாரணை

## வவனியா கொலைவழக்கு: எதிரிக்கு 15 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், சனி

வவனியா கொலைவழக்கில் எதிரியான அழகன் வேலு குற்றத்தைக் கைமோசக் கொலை என ஒப்புக்கொண்டதால் 15 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் இவ்வழக்கு நேற்று நீதியரசர் திரு. ஏ. வி. அலெஸ் முன்னிலையில் சுமார் மூன்று மணி நேரம் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜனவரி 16-ம் திகதி வவனியாவில் வைத்து தனது ஆசைநாயகியான சின்னக் கறுப்பன் முக்காயி என்ற பெண்ணைக் கொலைசெய்ததாக அழகன் வேலு மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. எதிரி தான் குற்றவாளி என்று சொன்ன பின்னரும் காலஞ்சென்றவரின் தங்கையான சின்னப் பொடியும் இறந்தவரைப் பரிசோதனை செய்த டாக்டர் தா. நாகரத்தினமும் விசாரணை செய்யப்பட்டனர்.

இவ்விசாரணையின் பின்னர் எதிரி தனக்குச் சடுதியாக ஏற்பட்ட கோபத்தால் இக்கைமோசக் கொலையைச் செய்ததாக ஒப்புக்கொண்டார். நீதியரசர் எதிரிக்கு 15 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்த பின்னர் எதிரியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்.

'இந்த வழக்குச் சூழ்நிலையைப் பார்க்கும் போது உனது மனம் என்ன பாடுபட்டிருக்கும், எவ்வாறு அல்லற்பட்டிருப்பாய் என்பது தெரிகிறது. இருந்தாலும் உனது மனைவியின் உயிரை எடுக்க உனக்கு எந்த உரிமையுமில்லை.'

எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ராஜ ராஜேஸ்வரன் தங்கராசா ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் பிரியாந்த பெரேரா வழக்கை நடத்தினார். (கா நி)

## கம்பர்மலை கொலை வழக்கு: எதிரிக்கு 18 மாத கடூழியம்

யாழ்ப்பாணம், சனி

கம்பர்மலை கொலை வழக்கின் எதிரியான மாணிக்கம் செல்லத்துரை தனது குற்றத்தை கைமோசகொலை என்று ஒப்புக்கொண்டதால் இவருக்கு 18 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்று காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு ஏ சி அலெஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வருடம் சித்திரை மாதம் 19-ந் திகதி கம்பர்மலை என்ற இடத்தில் வைத்து கதிரன் தம்பன்என்பவரை கொலை செய்ததாக மாணிக்கம் செல்லத்துரை மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இவருக்கு 18 மாத கடூழிய சிறைத்தண்டனையை நீதியரசர் விதித்தார்.

எதிரிக்காக வழக்கறிஞர் எஸ். சிவபாக்கியநாதன் ஆஜரானார் முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் பிரியந்தா பெரகரா வழக்கை நடத்தினார். (கா. நி)

## கிராமசபையின் புதிய உப தலைவர்

நாவற்குழி, வெள்ளி

நாவற்குழி கிராமசபையின் புதிய உபதலைவராக 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. அ. செல்வரத்தினம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை, க. வேலுப்பிள்ளை

ஆவணி மாதம் 14-ந் திகதி (30-8-69)

**மேஷம்**- வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்ற வர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்குப் பொதுசன தலைமையும் கிடைக்கலாம்.

**ரிஷபம்**- உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும். ஓய்வு விரும்பத்தக்கது.

**மிதுனம்**- திடீர் திருப்பங்கள் ஏற்படும். ஆரம்பத்தில் கடினபாகத் தோன்றியவைகள் இலகுவில் முடிவடையும். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழுரை கிடைக்கும். திருப்தியானதினம்.

**கடகம்**- இதயத்தின் ஏக்கம் இன்று கணியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகாரச்சிந்தை மேலிடும். நண்பர் ஒருவருக்குக் கைகொடுத்து உதவுவீர்கள். செல்வாக்குப் பெருகும்.

**சிம்மம்**- வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்த வேண்டும். தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும். புனைந்துரைகளால் மனது புண்படலாம். பேச்சை வளர்க்காது மௌனம் சாதிக்கவும்.

**கன்னி**- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். களத்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

**துலாம்**- சிரித்துப் பேசியவர்கள் இன்று சீறிவிழுவார்கள். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக்கொள்ள நேரிடும். சிலருக்குப் பதவி ஏற்றமும் தடைப்படலாம்.

**விருச்சிகம்**- புண்ணிய காரியங்களில் விருப்பம் மேலிடும். குடும்பத்திலும் பாக்கிய விருத்தியுண்டு. பொதுப் பணியின்மூலம் புகழ் கிடைக்கும். தெய்வத்தின் துணைக்கும் இடமுண்டு.

**தனுசு**- தொழில் புரியும் இடத்தில் மேலிடத்து ஆதரவுகிடைக்கும். புதுத் துறைகளில் நாட்டம் பிறக்கும் பதவி உயர்வுடன் சிலருக்குத் தொழில் மாற்றமும் கிடைப்பதற்கு இடமுண்டு.

**மகரம்**- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்துவிவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**- பணம் பறிப்பதற்காக ஒரு கோஷ்டியினர் புகழ்பாடிக்கொண்டிருப்பர். எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம். கடல் பிரயாணத்தைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

**மீனம்**- கண்துடைப்பு வேலைநடைபெறும். வீட்டில் சிறிய பூசல் தலைதூக்கலாம். எந்தவிடயத்திலும் நன்கு ஆலோசித்ததன் பின்பே முடிவெடுக்கவும். ஆணவத்தை அடக்கவும்.


57-வது தினம்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்

குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

ராணி (யாழ்ப்பாணம்)

சிவாஜி — ஜெயலலிதா

சௌகார் ஜானகி


## 'சிற்பி' நியமனம்

நல்லூர், வெள்ளி

இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ் மொழி பெயர்ப்புக் குழுவின் உறுப்பினராக திரு சி. சரவணபவன் (சிற்பி) கல்விஅமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிரியரான இவர் பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமாவர். ஈழத்திலும் தமிழகத்திலும் நடாத்தப்பட்ட பல இலக்கியப் போட்டிகளில் பல பரிசுகளை இவர் தட்டிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 30—8—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 கதம்பஇசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-10 பேச்சு, 6-15 வீணையும், புல்லாங்குழலும், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடக இசை, 7-35 மெல்லிசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## அடுத்த 6-ம் திகதி வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம், சனி

பார்வதி என்ற சிறுமியை இம்சைப் படுத்தியதாக றிமாண்டில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட டாக்டர் மீது அடுத்த மாதம் 6-ம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில்

## மாதகல்மேற்கு ச. ச. நிலைய ஆண்டுவிழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தின் 23-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்றபோட்டிகளின் முடிவுகள்:

பேச்சுப்போட்டி: த ஹரிச்சந்திரா, அ இராஜலட்சுமி

திருக்குறள் மனனம்: நா முத்தையாபிள்ளை, அ இராஜலட்சுமி

440 யார் ஓட்டம்: க மனோகரன், ந சண்முகநாதன்

கயிறடித்தல்; ஆ அன்னலட்சுமி, த புஷ்பராணி

30 யார் ஓட்டம்: ஆ மோகனராஜா, ஆ கோணேஸ்வரன்

100 யார் ஓட்டம்: மு சிவராணி, க நிர்மலாதேவி

440 யார் ஓட்டம் (மேற்பிரிவு) அ அமிர்தராணி, மு லலிதாதேவி

குண்டெறிதல்: க மனோகரன், ந சண்முகநாதன்

தேவாரப் போட்டி: வ கதிரமலைராசா, அ இராசலட்சுமி

தடை ஓட்டம்: நா முத்துப்பிள்ளை, மு லலிதாதேவி

மரதன் ஓட்டம்: நா சண்முகநாதன், வ கதிரமலைநாதன்

நாடகப்போட்டி: 'எடியே கமலா' (நகைச்சுவை நாடகம் நீதிடதியோ என் மகன்

வில்லுப்பாட்டு: நவீன கண்ணகி (கா நி)


**காப்புறுதிப்பத்திரம்: 5856547**

நாகலிங்கம் பாலசுப்பிரமணியத்திற்கு புருடென்ஷல் அஸ்யூரன்ஸ் கொம்பனியால்வழங்கப்பட்ட இல. 5856547 காப்புறுதிப் பத்திரம் காணமற்போய்விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் அல்லது இதில் ஏதாகிலும் பாத்தியதை கோருபவர்கள் முகாமையாளர், புருடென்ஷல் அஸ்யூரன்ஸ் கொம்பனி லிமிட்டெட், த. பெ. இல. 360; கொழும்பு 1 என்ற முகவரிக்கு இத்திகதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள் தொடர்பு கொள்ளவேண்டும். அதன்பிறகு வரும் கோரிக்கைகள் பரிசிலனைக்கு எடுக்கப்படமாட்டாது. 1718


## தண்ணீர்ப்பந்தல்களில் ஆபாசப் பாடல்களுக்கு தடை

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு அமைந்துள்ள தண்ணீர்ப்பந்தல்களில் பக்திப் பாடல்களைத் தவிர்ந்த ஆபாசப் பாடல்களை ஒலிபெருக்குவதற்கு தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது, இதற்கான அறிவித்தலொன்று சகல தண்ணீர்ப் பந்தல்களுக்கும் உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவரால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆலயத்தில்நின்ற உயர்தரபொலிஸ் அதிகாரி ஒருவர் திரும்பிக்கொண்டிருந்தபோது தண்ணீர்ப் பந்தல்களில் ஆபாசப் பாட்டுக்கள் ஒலிபெருக்கிக் கொண்டிருப்பதை அவதானித்தாகவும், அப்போது அந்தப்பந்தலிலுள்ள ஒலிபெருக்கியின் லைசென்சை உடனடியாக ரத்துச் செய்ததாகவும் தெரிய வருகிறது.

தண்ணீர்ப் பந்தல்களில் வாலிபர்கள் தங்கியிருந்து அவ்வழியே செல்லும்பெண்களைப் பார்த்து கேலிசெய்வதாகவும் பொலிசாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து ரோந்து சுற்றும் பொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. (கா. நி)


''புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்''

ஏ. எவ். றேமண்ட்ஸ்,

147, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில் மனம்நிறைந்த

அந்திய சேவை ரூபா 75/-

உயர்தர பிரேதப் பெட்டிகள் ரூபா 50/-


## வரி விளம்பரம்


### தேவை

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு லைட் இன்ஜின் இயக்குபவரும், மின்சார வேலை தெரிந்தவரும் தேவை. மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் நியூட்ரான் எலெக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம். விண்ணப்பங்கள் 'கௌரவகாரியதரிசி' நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு என்ற விலாசத்துக்கு அனுப்பவும். 1356

### WANTED

Wanted for the Co-operative Hospital Moolai, Chulipuram a qualified Matron with Nursing and Theatre experience. Salary and Allowances will be paid according to qualifications and experience Application with copies of certificates of birth, educational qualifications and character should reach the President on or before 15-9-69. 1355

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

புதிய அங்கத்தவர் ரோபியலக் குடும்பத்தின் பிளாஸ்டிக் நீர்ப்பதப் பெயின்ட்




Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த

# எங்க ஊர் ராஜா

## யாழ் வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்


ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, சிவகுமார்,
கீதாஞ்சலி, நாகேஷ், அஞ்சலிதேவி
நடித்த

# பால்குடம்

அத்துடன் விண்வெளிக்கலம் அப்பல்லோ - 10 ன் பயணக் காட்சியும், சந்திரனில் முதல் மனிதன் இறங்கி நடந்த அப்பல்லோ-11 காட்சியும் காண்பிக்கப்படுகின்றது.

## யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ணா ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)

யாழ்ப்பாணம், சனி

பார்வதி என்ற சிறுமியை இம்சைப் படுத்தியதாக றிமாண்டில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட டாக்டர் மீது அடுத்த மாதம் 6-ம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

சத்திர சிகிச்சை உதவி வைத்தியரான டாக்டர் சதானந்தனும் அவரது மனைவியும் குறிப்பிட்ட வேலைக்காரச் சிறுமியைக் கொடுமைப்படுத்தியதாக புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டு, பின்னர் தலா 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டது தெரிந்ததே.

## குருமார்கள் இரத்ததானம்

கண்டி, வெள்ளி

சமீபத்தில் நடைபெற்ற கண்டி பெரகராவின் போது அநேக பௌத்த குருமார்கள் இரத்ததானம் செய்தார்கள்.

கண்டிப் பெரகராவையொட்டி மகா மலுவாவில் நிறுவப்பட்ட தற்காலிக இரத்த தான நிலையத்தில் பெரகராவுக்காக நாடெங்கும் இருந்து தலதா மாளிகாவுக்குச் சென்றிருந்த பௌத்த குருமார்கள் இரத்ததானம் செய்தார்கள்.

## வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி
நடித்த
# பதி பக்தி

வல்வெட்டித்துறை
## ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம்.ஜி.ஆர். - பானுமதி
நடித்த
# காஞ்சித் தலைவன்

## MANOHARA
JAFFNA
Daily 6-30,, & 10-00 p.m
Poya, Pre-Poya 4 Shows
Anula Karunathilaka
Vikramapokadai
in
GOLUHADAWATHA
(The best love story in Sinhalese)

## REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Walter Matthau
Inger Stevens
in
A GUIDE FOR THE MARRIED MAN
(Adults only)

# பிளாஸ்டிக் நீர்ப்பதப் பெயின்ட்




GC 6-155-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசியாவில் மீண்டும் குமுறல்
# 'பள்ளிவாசல் தீ' பரவும் அறிகுறி

## அரபுத்தலை நகர்களில் ஆர்ப்பாட்டம்

கெய்ரோ, ஆகஸ்ட் 29

மேற்காசியாவில் மீண்டும் பெரும் நெருக்கடியொன்று உருவாகிக்கொண்டிருப்பதாக அவதானிகள் அறிவிக்கிறார்கள். மேற்காசியாவின் பல இடங்களிலிருந்தும் விமானத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சண்டைகள், கொமாண்டோ ஊடுருவல்கள் பற்றிய செய்திகள் கிடைத்தவண்ண மிருக்கின்றன

இதற்கிடையில் ஜெருசலத்தில் அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சிரியா, ஜோர்டான், ஈராக், லெபனன் போன்ற எல்லா நாடுகளிலும் பெரிய ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும், வேலைநிறுத்தங்களும் நடைபெற்றுள்ளன.

டமாஸ்கஸ்ஸில் சுமார் ஒரு லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தி அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்

ஜோர்டான் தலைநகரான அம்மானிலும் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. பாக்தாத்திலும் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கெய்ரோவில் சுமார் 70 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

ஜோர்டான் மன்னர் ஹுசேன் சவூதி அரேபிய மன்னருடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக அங்கு போய்க்கொண்டிருக்கிறார்.

நேற்று லெபனனில் அரசாங்க பாதுகாப்பு படைகளுக்கும் பாலஸ்தீன அகதிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பலர்காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதை இந்தியாவில் பம்பாய் பிஷப்பும், கல்கத்தா அர்ச் பிஷப்பும் கண்டித்திருக்கிறார்கள்.

ஐக்கிய அரபுக் குடியரசுக்குள் மீண்டும் இஸ்ரேல் கொமாண்டோக்கள் வெகுதூரம் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தியதாகவும் எகிப்தியரின் ராணுவமுகாம்களை நாசமாக்கியதாகவும் இஸ்ரேல் அறிவித்தது. கொமாண்டோக்கள் பத்திரமாகத் திரும்பிவிட்டதாகவும் டெல்அல்வில் அறிவிக்கப்பட்டது. மத்திய ஜோர்டானின் பள்ளத்தாக்குகளில் இஸ்ரேலிய விமானங்கள் ராணுவநிலைகள்மீதும் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியது. ஜெருசலத்துக்கு அருகாமையில் இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஜோர்டான் துருப்புகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் நேற்று அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## இந்திய உபஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறும்

புதுடில்லி, ஆகஸ்ட். 29

இந்தியஉபஜனாதிபதிபதவிக்கான தேர்தல் நாளைநடைபெறுகிறது. புதுடில்லியிலுள்ள பாராளுமன்றக் கட்டிடத்தில் வாக்களிப்பு நடைபெறும். வாக்களிப்புமுடிந்தவுடன் ஒரு மணிநேரத்துக்குப்பின்னர் வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப்பதவிக்குப்போட்டியிடுபவர்களில் இருவர்விலகிக்கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ்கட்சி தனது வேட்பாளர் திரு. ஜி. பாடக்குக்கே காங்கிரஸ்வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கின்றது. உப ஜனாதிபதி பதவிவிஷயமாக காங்கிரஸ் கருத்து வேறுபாடு இன்மையால் திரு. பாடக்கே உப ஜனாதிபதியாகத்தெரிவுசெய்யப்படுவர் என்று நம்பிக்கை நிலவுகின்றது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் தமது இரண்டாவதுவாக்கை வேறு எந்தக்கட்சியாளருக்கும் போடக்கூடாதென்றும் கட்டளையிடப்பட்டுள்ளது.

## மொரார்ஜிவிஷயம் இன்னும் தீர்க்கப்படவில்லையாம்
### நிஜலிங்கப்பா கூறுகிறார்

புதுடில்லி ஆகஸ்ட் 29

மொரார்ஜி தேசாய் சம்பந்தமான விஷயம் இன்னும் தீர்ந்துவிடவில்லையென்று காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா அறிவித்திருக்கிறார். இதுசம்பந்தமாக தாம் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலின் போது கட்சி வேட்பாளரை எதிர்த்து வாக்களித்தவர்கள் மீது காரியக் கமிட்டி நடவடிக்கை எடுக்காதது குறித்து திரு மொரார்ஜி தேசாய் அதிருப்தியடைந்திருப்பதாகவும் இந்தப் பிரச்னையின் மீது அவர் பதவியை ராஜினாமா செய்யக் கூடும் என்றும் அரசியல் வட்டா...

...கட்டுப்பாடு மீறப்படுவதை சகிக்க முடியாது என்றும் காங்கிரஸ் அக்கிராசனர் நிஜலிங்கப்பா பெங்களூ தெரிவித்தார்..

ஒருவார காலம்ஓய்வெடுப்பதற்ககா இங்குவந்துசேர்ந்த அவர் நிருபர்களுடன்பேசுகையில் ஜனாதிபதி தேர்தலில் கட்சிக் கட்டுப்பாடு மீறப்பட்டது காரணமாக நாங்கள் பிளவுபட மாட்டோம் என்று சொன்னார்.

கட்சிக் கட்டுப்பாட்டை பறிகொடுத்து ஒற்றுமை காணப்பட்டது என்று ஒரு நிருபர் கூறியதை அவர் ஏற்கவில்லை, இன்னும் தீவிரமாக கட்சிக் கட்டுப்பாடு அமைக்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் ஒரு பாடமாக அறிந்தோம். 'மனச் சாட்சி'ப்படி வாக்க...

...பற்றி குறிப்பிட்டு நடக்கக் கூடாத விஷயம் நடந்துவிட்டது. காங்கிரஸில் பலப் பரீட்சைக்காக சிலர் தயாராக காத்திருந்தார்கள் அம்மாதிரி நடக்க நாங்கள் அனுமதிக்கவில்லையென்று சொன்னார்.

காரியக் கமிட்டி இந்த ஸ்தாபனம் பிளவு படக் கூடாது என்ற நோக்கத்திலேயே அத் தீர்மானத்தை நிறைவேற்றியதாக குறிப்பிட்ட அவர் 'மனம்விட்டு விவாதித்த பின்னர்' அந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகச் சொன்னார்.

சில கட்சிகள் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள் காரியக் கமிட்டி முடிவு குறித்து மகிழ்ச்சி கொள்ளவில்லையென்றார்.

## சீனாவில் ஆதிக்கப்போட்டி ஏற்பட்டு விட்டதாம்
### ரஷ்யப் பத்திரிகை கூற்று

மாஸ்கோ, ஆகஸ்ட். 29

சீனாவில் மாஸேதுங்குக்கும், அவர் வாரிசாக நியமிக்கப் பட்டுள்ள மார்ஷல் லின் பியாவுக்கும் இடையே அதிகாரத்துக்காக கடும்போட்டி நடப்பதாகவும், வாரிசு காத்திருக்க விரும்பவில்லை என்றும் ஒரு ரஷ்யப் பத்திரிக்கை கூறியது.

இந்தஅதிகாரப்போட்டாப் போட்டியின் ஒரு பக்கத்தில் மாவும் அவர் மனைவியும் உள்ளனர்.

மறு பக்கத்தில் லின்னும் அவர் மனைவியும்இருப்பதாக ரஷ்ய எழுத்தாளர் சங்கத்தின் பத்திரிகை லிடாராடுர்னயாகெஸடா கூறியது.

இருகோஷ்டிகள்இடையே நடக்கும், மறைமுக சண்டையை பத்திரிகை விவரித்தது. லின் தலைமையில் உள்ள ராணுவத்துக்கும், மாவிடம் இன்னும் விசுவாசம் கொண்டுள்ள சில சிவிலியன் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே ஆதிக்கப் போட்டி நடக்கிறது.

பெரும் பாய்ச்சல் திட்டம், 100 பூக்கள் மலரட்டும் என்ற கொள்கை ஆகிய வற்...

## காந்தியின் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்

லண்டன், ஆக. 29

காந்திஜியின் வாழ்க்கை... ...கும் இந்தப்படம் மகாத்மா என்று அழைக்கப்படுகிறது.

## மன்னாரில் கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் தொழிற்சங்கத்தின்மன்னார் மாவட்டக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம்அடுத்த மாதம் 3-ம் திகதி திருக்கேதீஸ்வரம் கோவில் சரவணமுத்து சாமியார் மடத்தில் நடைபெறவிருக்கிறது.

மன்னார் எம், பி. திரு வி. ஏ. அழகக்கோனைஇவ்வைபவத்தில் அதிதியாகக் கலந்துகொள்ளுமாறு மேற்படி சங்கச் செயலாளர் திரு ஐ, நடராசா கேட்டுள்ளார்.

## நியமனப் பத்திரம் தாக்கல்

மல்லாகம், வியாழன்

மல்லாகம், கிராம சபை 11-ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் மாவட்ட தேர்தல் அதிகாரியால் அடுத்த மாதம் 12-ம் திகதி கிராம சபைக் காரியாலயத்தில் வைத்து ஏற்றுக் கொள்ளப் படும்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும் கரவெட்டி வாணி கலைக்கழக இயக்குனருமான பண்டிதர் திரு க. வீரகத்தி நாவற்குழி கணேச வித்தியாலய தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய சேவையைப் பாராட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவரும் ஆசிரியரும் ஒரு பாராட்டு வைபவம் நடத்தவிருக்கிறார்கள்.

## லொறி குடைசாய்ந்து ஒருவர் மரணம்

கொழும்பு, வெள்ளி

லொறி குடைசாய்ந்ததில் ஒருவர் துடிதுடித்து மாண்டார். 9பேர் ஆபத்தான நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். மற்றுமிருபத்தொருவர் சிறுகாயத்துக்குள்ளானார்கள். இந்த பயங்கர விபத்து கண்டிக்கு சமீபத்திலுள்ள கொக்கலை என்றஇடத்தில் நேற்று நடந்தது.

## பாராட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

சமூகக்குறைபாடுகள் சட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு கச்சேரிக்கு முன்னால் உண்ணாவிரதமிருந்து வெற்றிகண்ட மூன்று சிறுபான்மைச் சமூகத்தலைவர்களுக்கும் பாராட்டுத் தெரிவித்து உடுப்பிட்டிக் கிராமசபையில் 9-ம் வட்டார உறுப்பினர் திரு. சி. மார்க்கண்டு கடிதம் அனுப்பிவைத்துள்ளார். ......

## 3 சிறுபான்மையருக்கு சமாதான நீதவான்


உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதியில் மூன்று சிறுபான்மைச்சமூகத்தவர்களுக்கு ஜே. பி. பட்டம் வழங்கப்பட்டு உள்ளது.

நீதி அமைச்சரினால் உடுப்பிட்டித்தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட எட்டு ஜே. பிக்களுக்கான பதவிகளில் சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்த மூவருக்கு ஆட்சிமன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரத்தின் சிபார்சைத்தொடர்ந்து சமாதான நீதிபதிப்பட்டம் வழங்கப் பட்டு உள்ளது.

திரு. வேலும்மயிலும், திரு. சின்னத்தம்பி, திரு. குலேந்திரம் ஆகிய மூவருமே இப் புதிய சமாதான நீதிபதிகளாவர். ......

## சிரமதானம்



## புதிய ஜே. பி.

சுழிபுரம் வெள்ளி

தொல்புரத்தைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் நரசிங்கம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஜமீல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

திரு. நரசிங்கம் சமூகத் தொண்டின் மூலம் கிராம மக்களின் நல்வாழ்விற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அளப்பரிய சேவை செய்ததோடல்லாமல் சாதி சமயம், செல்வந்தர் வறியவர் என்ற பாகுபாடின்றியும் பணிபுரிந்துள்ளார்.

இவர் வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தில் ஒரு நிர்வாகியாகவும், சுழிபுரம் கிராமசபையின் மூன்றும் வட்டார அங்கத்தவராகவும் தொல்புரம் கிழக்குப் ப நோ கூ சங்கத்தின் காரியதரிசியாகவும் பின்னர் தலைவராகவும் கடமையாற்றிவருகின்றார். தொல்புரம் கிழக்கு ப நோ சங்கத்தில் இவர் பதவி வகித்த காலத்தில் பலவிதமான மாற்றங்களைச் செயற்படுத்தி கூட்டுறவுப் பகுதியினரின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெற்றுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினால் நடாத்தப்படும் கல்லுண்டாய் உப்பளத்தில் பொறுப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் பல சீர்திருத்தங்களையும் கொணர்ந்துள்ளார்.

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் நிர்வாகிகளில் ஒருவராகவும் கடமையாற்றியுள்ளார். தொல்புரம் மூளாய் சிறப்புநலன் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதியாகவும், அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் சபையின் அங்கத்தவராகவும், தொல்புரம் கிராம...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காத்திருக்க விரும்பவில்லை அவர் மனைவியும்இருப்பதாக

## காந்தியின் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்

லண்டன், ஆக. 29

காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஒரு முழுநீள விபரணைப் படம் ஒன்று (டாக்குமென்டறி) சென்றவாரம் லண்டன் மாஜெஸ்டிக் தியேட்டரில் காண்பிக்கப்பட்டது. காந்திஜியின் நூற்றாண்டு விழாவைமுன்னிட்டு விசேஷமாக தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தப்படம் மகாத்மா என்று அழைக்கப்படுகிறது.

காந்தி நூற்றாண்டு விழாவுக்கான பிரிட்டிஷ் கமிட்டி பிரிட்டிஷ் இந்திய அரங்கு இந்திய சினிமாசங்கம் ஆகியன கூட்டாகச் சேர்ந்து இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது. இது நான்கு மணித்தியாலப் படம் என்பது குறிப்பிடத் தக்கது.

## டெலிபோன் பேசும் கம்பியூட்டர் இயந்திரம்

லண்டன், ஆக-29

மனித உதவியின்றி இயந்திரங்கள் டெலிபோன் பேசிக்கொள்ளும் அதிசயம் அடுத்த ஆண்டிலிருந்து பிரிட்டனில் நிகழவிருக்கின்றது, மின் கணிதமானிகள் எனப்படும் கம்பியூட்டர் இயந்திரங்கள்தான் இந்தப் புதுமையான சாதனையை நிலைநாட்டப் போகின்றது. தொலைபேசி இயக்குனர் ஒருவர் எவ்விதம் டெலிபோன் எடுப்பதும் வரும் அழைப்புகளுக்குப் பதிலளிப்பதுமாக காரியமாற்றுகிறாரோ அதே போன்ற சிக்கலான கைங்கரியத்தை இனிமேல் இந்தக் கம்பியூட்டர் இயந்திரங்கள் மேற்கொள்ளும்.

உதாரணமாகஇரவுநேரங்களில் வர்த்தக ஸ்தாபன ஊழியர்கள் வீடு திரும்பிவிட்டால் வியாபாரத் தொழில் சம்பந்தமாகவரும் தொலைபேசிஅழைப்புகளுக்கு பதிலளிப்பதுடன், வர்த்தக விலைவாசி போக்கு சம்பந்தமாக டெலிபோன் மூலம் சகல தகவல்களையும்சேகரிக்கக் கூடியகம்பியூட்டர் இயந்திரங்கள் இனி சேவையாற்றப் போகின்றன. அடுத்த ஆண்டிலிருந்து இந்தப் புதுமையான கம்பியூட்டர் டெலிபோன் இணைப்புகள் பிரிட்டிஷ் வர்த்தகத்துறையில் புகுத்தப்படவிருக்கின்றன. மனித தலையீடுஇன்றி இங்கிலாந்து தேசிய தொலைபேசி சேவையில் இயந்திரங்கள் தகவல் பரிமாறிக் கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

## மணிக்கு 150 மைல் போகும் ஜெட் ரயில் சேவை

லண்டன் ஆக. 29

மணிக்கு 150 மைல் வேகமாகச் செல்லும் ஆற்றல் படைத்த ஜெட் ரயில் சேவை 1974-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதன் மாதிரி ரயில் ஒன்று இன்னும் ஒரு வருடத்தில் உருவாக்கப்படும்.

வாயு விசைப்பொறிகள் மூலம் இயங்கும் இந்தப் புரட்சிகரமான ரயில்களைப் படைப்பதற்கான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று இப்பொழுது இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 10 கோடி பவுண்கள் செலவாக விருக்கும் இத்திட்டத்தை பிரிட்டிஷ் ரயில் சேவையும், பிரிட்டிஷ் போக்குவரத்து அமைச்சும் கூட்டாக செயற்படுத்தி வருகின்றன.

இந்த நவீன ரயில்கள் இப்போதைய ரயில் தண்டவாளங்களில் ஓட முடியுமென்றும் இதன் பெட்டிகள் உலோகக் கலவைகளைக் கொண்டு நிர்மாணிக்கப்படுமென்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்தப் பெட்டிகள் குளிரூட்டப்பட்டவையாக சொகுஸான வசதிகளுடையவையாக அமைக்கப்படும். ஓசை கேட்காதபடியும், ஆட்டம் ஏற்படாதபடியும் ரப்பர் அமைப்புகள் பெட்டிகளின் உடலமைப்பில் பொருத்தப்படும்.

நவீனமாக சமிக்ஞை திட்டம் மூலம் இந்த ரயில்கள் சேவையாற்றும். அத்துடன் அதிவேகமாகச் செல்லும் இந்த ரயில்களை நினைத்தபடி கட்டுப் படுத்தும் புதுமையான கட்டுப்பாட்டு அமைப்பொன்றும் இந்த ரயில் இயந்திரங்களுடன் பொருத்தப்பட்டிருக்கும். ரயில்சேவையில் இந்த அதிவேக ஜெட் ரயில்கள் ஒரு புரட்சியை உண்டுபண்ணுமென பிரிட்டிஷ் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

---

ராணுவத்துக்கும், மாவிடம் இன்னும் விசுவாசம் கொண்டுள்ள சில சிவிலியன் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே ஆதிக்கப் போட்டி நடக்கிறது.

பெரும் பாய்ச்சல் திட்டம், 100 பூக்கள் மலரட்டும் என்ற கொள்கை ஆகிய வற்றின் விளைவால் நாட்டிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் மாவின் செல்வாக்கு மங்கியதாக அது கூறியது.

நாட்டில் ஆதரவுக்குஅடிப்படை இல்லாததால் அதிகாரத்துக்கு ராணுவத்தை மாவோ நம்பவேண்டியதாயிற்று. ஆனால் மாவை ஆதரிக்க ராணுவம் தயாராக இல்லை. ஆகவே கடும் களை எடுப்பு நடத்தி 1959ல் லின்னை பாதுகாப்பு மந்திரியாக்கினார்.

தன் நிலையை பலப்படுத்த நிலவரத்தை சாதகமாக்கிக் கொள்ள லின் பியாவ் தயாராக இருந்தார். தன்னை உப தலைவராகவும், வாரிசாகவும் நியமிக்க கோரி லின் அதை சாதித்துக்கொண்டார்.

மாவும் லின்னும் பரஸ்பரம் மகிழ்வதாக தோன்றும் ஆனால அது தவறானகருத்து. அவர்களில் யாரும் மற்றவர் குறித்து முழு திருப்தி அடையவில்லை.

மாவோ பீடத்தைக் கைப்பற்ற லின் ஆசைப்படுகிறார். வசதியான சமயம் தன் ராணுவத்தின் உதவியுடன் அதைச் செய்ய அவர் தயாராக உள்ளார்.

அரசியல் பூசல்களில் கைதேர்ந்தவரான மாவோ ராணுவத்தின் செல்வாக்கைக் குறைக்க முயற்சிக்கிறார்.

ஆனால் மாவோ, லின் இடையே ஆதிக்கப்போட்டி வலுத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் மாவோவுக்கு நிலைமை மீறி விட்டதாக பத்திரிகை கூறியது.

## எது சரி?

யாழ்ப்பாணம், சனி

இவ்வருடம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ சாதாரண பரீட்சைக்கு சுழிபுரத்திலிருந்து தோற்றிய நா. இளயதம்பி என்ற மாணவனுக்கு ஏழு பாடங்களில் திறமையான சித்தி பெற்றிருப்பதாக கல்வி இலாகா முதலில் அறிவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து அவர் கந்தரோடையிலுள்ள பாடசாலையில் உயர்கல்வி பெற விண்ணப்பித்து அங்குதமது கல்வியை ஆரம்பித்தார்.

கல்வி இலாகா நேற்று முன்தினம் அவர் ஒருபாடத்தில் மட்டுமே சித்திபெற்றிருப்பதாக அறிவித்திருக்கிறது. இப்போது இந்த மாணவன் என்ன செய்வதென்று தெரியாத நிலையிலிருக்கிறார்.

---

எதிர்த்து வாக்களித்தவர்கள் மீது காரியக் கமிட்டி நடவடிக்கை எடுக்காதது குறித்து திரு மொரார்ஜி தேசாய் அதிருப்தியடைந்திருப்பதாகவும் இந்தப் பிரச்னையின் மீது அவர் பதவியை ராஜினுமா செய்யக் கூடும் என்றும் அரசியல் வட்டாரங்களில் கதையடிபடுகின்றது.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது நடவக்கை எடுக்கும் உத்தேசம் இப்போது இல்லை என்றாலும்கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாம் தெளிவு படுத்துவதாகவும் எந்தக் காரணத்தைக்கொண்டும் கட்சிக் கட்டுப்பாட்டை ஒற்றுமை காணப்பட்டது என்று ஒரு நிருபர் கூறியதை அவர் ஏற்கவில்லை, இன்னும் தீவிரமாக கட்சிக் கட்டுப்பாடு அமைக்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் ஒரு பாடமாக அறிந்தோம். ‘மனச் சாட்சி’ப்படி வாக்களிப்பது என்றவிஷயம் சஞ்சீவரெட்டியை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே கையாளப்பட்டதாகும் என்று நிஜலிங்கப்பா மேலும் கூறினார்.

டில்லியில்காரியக் கமிட்டி மேற்கொண்ட முடிவைப் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கும்போது தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோற்கடிக்கப் பட்டதைப் விவாதித்த பின்னர் அந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகச் சொன்னார்.

சில கட்சிகள் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள் காரியக் கமிட்டி முடிவு குறித்து மகிழ்ச்சி கொள்ளவில்லை யென்றார்.

## மணவாளக் கோலம்

உடுவில், வெள்ளி

ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற்றது. இதனை முன்னிட்டு விசேட பூசைகளும் 108 சங்கு அபிஷேகமும் நடைபெற்றன.

---

நீதிபதிப்பட்டம் வழங்கப் பட்டு உள்ளது.

திரு. வேலும்மயிலும், திரு. சின்னத்தம்பி, திரு. குலேந்திரம் ஆகிய மூவருமே இப் புதிய சமாதான நீதிபதிகளாவர். ......

## சிரமதானம்

உடுப்பிட்டி, வெள்ளி

வதிரி உல்லியனொல்லை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வதிரி சிரமதான இயக்கத்தினர் கோவில் காணியையும், நெல்லியடிப் பட்டினத்துக்குரிய காணியையும் சிரமதானம் மூலம் சுத்தம் செய்தனர். திரு. கு. கந்தையா தலைமையில் இச்சிரமதானம் நடைபெற்றது.

---

பத்திரியில் நிர்வாகிகளில் ஒருவராகவும் கடமையாற்றியுள்ளார். தொல்புரம் மூளாய் சிறப்புநலன் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதியாகவும், அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் சபையின் அங்கத்தவராகவும், தொல்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவராகவும் நீதிமன்ற ஏலவிற்பனையாளராகவும் மதிப்பீடு கமிஷனராகவும் யாழ். மாவட்ட வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜ நிர்வாக அங்கத்தவராக இருந்துவருகின்றார்.

அரசாங்கத்தில் புகையிரத இலாகாவில் கடமையாற்றிய இவர் சிங்கள மொழிச் சட்டத்தின் காரணமாக 1963-ம் ஆண்டில் இளைப்பாறியுள்ளார். இவர் இளைப்பாறும் பொழுது ஸ்தல ஸ்தாபன உதவி புகையிரத அதிபராக கோட்டை ஸ்டேஷனில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவருக்கு தற்பொழுது வயது 44.

# கிருபானந்தவாரியார் பேசிய கூட்டத்தில் கருணாநிதி குழப்பம் செய்தாராம்

## அவரே தெரிவித்த தகவல்

சென்னை, ஆகஸ்ட். 29

கிருபானந்தவாரியார் திருவாரூரில் கதாகாலட்சேபம் நடத்தும்போது இப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி மாணவனாக இருந்தபோது குழப்பம் விளைவிப்பாராம் இதை திரு. கருணாநிதியே சொல்லி கவலைப்பட்டார்.

மேல்சபை உறுப்பினராகியுள்ள குன்றக்குடி அடிகளையும் சென்னைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் திரு. சுந்தரவடிவேலையும் பாராட்டுவதற்காகநடைபெற்றகூட்டத்தில் திரு. கருணாநிதி பேசினார்.

அவர் கூறியதாவது:-

சிலருக்கு கருணாநிதியா தருமபுர ஆதீனத்திலா கலந்துகொள்வதா என்று கூட ஆச்சரியமேற்படலாம். அத்தகைய ஐயமேற்படலாம். நான் இங்கு வரத்துணிந்தது ஆச்சரியமல்ல. ஆனால் என்னை இங்கு அழைக்க அவர்களுக்கு துணிவுவந்ததே, அதுதான் ஆச்சரியம்.

தமிழ்நாட்டில் ஒரு தமிழன் புகழும் பெருமையும் அடைவதை எண்ணி மற்றொரு தமிழன் பாராட்டுகின்ற அந்தப்பண்பைநீண்டகாலத்துக்குமுன்பே தமிழன் ..கவிட்டுவிட்டான். அந்தப் பண்பை மீண்டும் பெறுகிற யுகத்தை நாம் பெற்று வருகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகவேஇந்த விழா நடக்கிறது.

தமிழ்நாட்டு மடாதிபதிகள் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் செய்தார்கள் என்பதே இந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு பின்தான். குன்றக்குடி அடிகளை மற்ற மடாதிபதிகள் ஏற்ற இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. மடாதிபதிகளுக்கு இளையாக இருந்து அத்தனை பேரையும் ஒரு மாலையெனச் சேர்த்த பெருமை குன்றக்குடி மடாதிபதியையே சாரும்.

குன்றக்குடி அடிகள் மேலவை உறுப்பினராக ஆனதற்கு, ஆக்கப்பட்டதற்குப் பாராட்டுகள் என்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அடிகளாரைப் பாராட்டுவதில் ஒன்றுமில்லை அவர் ஏதோ இந்தப் பதவியைப் பெற பெரிய முயற்சியில் ஈடுபட்டார், வெற்றி பெற்றார் என்று சொல்லி அவரைப்பாராட்டஇயலாது சாதாரணமாக எந்த இடத்திலும் பாராட்டுக்களை உதறிவிடுகிற நான் இப்போது தெரிவிக்கப்பட்ட பாராட்டுகளை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன்.

மேலவை உறுப்பினராக ஆகும்படி நான்தான் நீண்ட நேரம் தொலைபேசியில் அவருடன் பேசி ஏற்றுக்கொள்ளும்படி சொன்னேன்.

யோசித்துக் கூறுங்கள் என்று சொன்னேன். அவர் ஏற்றுக்கொண்ட போது, நான்தான் அவருக்கு நன்றி சொன்னேன். ஆகவே பாராட்டுக்களுக்கு உரியவன்நான் தான் அவரல்ல

மடாதிபதிகளுக்கு மேலவை என்பது எங்கோ இருப்பது. மக்கள் தொண்டாற்ற ஒருமேலவை இங்கு உள்ளதென்று அவர்களை இங்கு அழைத்துவந்தேன். மகேசன் தொண்டாற்றி அடைய எண்ணுகிற மேலவைவேறு அடிகளாரை மேலவை உறுப்பினராக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு திடீரென்று ஏற்பட்டது என்பது உண்மை.

கருணாநிதியாக இல்லாதிருந்தால் ஏதோ ஒரு சக்தி என்னுள் தோன்றி இப்படி ஆணையிட்டது என்று கூறியிருக்கலாம்.

கழக அரசைக் குறித்து மக்களிடத்தில் ஒரு தவறான கருத்துபரப்பப்பட்டுள்ளது. முன்னேற்ற கழக அரசின் கீழ் ஆலயங்களுக்கு ஆளுங் கட்சிக்காரர்களாலும் அவர்களுடைய ஆதரவைப் பெற்றவர்களாலும் கொடுமை நிகழுவதாக இன்றளவும் நாகரீகமான நடுநிலை ஏடுகள் என்றுநாம் எண்ணிக் கொண்டிருக்கிற பெரிய ஏடுகள் தலையங்கங்களை எழுதித் தீர்த்தன. நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம்.

நாங்கள் அளித்த விளக்கங்களும் கொள்கைகளும் ஏடுகளால் சரியாக பிரசுரிக்கப்படுவதில்லை அந்த அளவுக்கு அவர்களுக்கு எரிச்சல்; ஏனென்றால் நாங்கள் சாமானியர்கள். ஆகவேதான் நாங்கள் தருகிற செய்திகளையும் கொள்கை விளக்கங்களையும் அவைகள் அலட்சியம் செய்து விடுகின்றன.

குன்றக்குடி மடாதிபதியைப் போன்றவர்கள் நேரடியாகப் பார்த்துச் சொல்லட்டும். அப்படிச் சொன்னால் நாட்டு மக்களுக்கு அது நன்கு தெரியும் என்ற சுயநலத்தோடு தான் அவரை மேலவைக்கு அழைத்து வந்தேன்.

என்னுடைய இளமைப் பருவத்தில் மதக்கருத்துக்களோடு வேறுபட்டு அவைகளுக்கெதிராகப் போராடியவன் நான். ஆனால் எல்லா மக்களுக்கும் பொறுப்பான ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் அனைவருக்குமாகத் தான் செங்கோல்பிடிக்க வேண்டும். எனது கருத்துக்களுக்காக மட்டுமென்று சொல்லி தனிச் செங்கோல் பிடிக்க முடியாது. எங்களை எல்லாம் ஆளாக்கிவிட்டு மறைந்த அண்ணனிடமிருந்து கற்றவை இவை.

கதாகாலட்சேபங்கள் மூலம் தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்ட பேரறிவாளர் கிருபானந்த வாரியார். திருவாரூரில் ஆயிரங்கால் மண்டபத்தில் கதாகாலட்சேபம் செய்வார். அதில் நானும் வேறு சில மாணவர்களும் குழப்பம் விளைவிப்போம்

இதனாலே என் கல்வி நிறைவு பெறவில்லை. கல்லூரிக்குப் போக முடியவில்லை. இப்படி நான் சொல்வதை மாணவர்கள் எவரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். படிக்காமலிருந்தாலும் மந்திரியாக ஆகிவிடலாம் என்று எண்ண வேண்டாம். நான் விதிவிலக்கு; விதிவிலக்கெல்லாம் வழி ஆகிவிடாது.

அடிகளும் சுந்தரவடிவேலுவும் துறவியும் வேந்தனும் போல அமர்ந்திருக்கிறார்கள். துறவிக்கு வேந்தனும் துரும்பென்பார்கள். அவர்களிருவருமாகச் சேர்ந்து இந்த ஆட்சியை பகைவர்களுக்கு இரும்பாகவும் நண்பர்களுக்கு கரும்பாகவும் ஆக்கட்டும்.

---

### கல்வி மா அதிபர் யாழ். வருகிறார்

பருத்தித்துறை, வெள்ளி

அச்சுவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையை பௌத்த தமிழ்ப்பாடசாலையாக்கும் நோக்கத்துடன் கல்வி மா அதிபர் திரு. டி. ஜி. குலதுங்கா அடுத்தமாதம், பலபுத்த குருமாருடனும், பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. பி எஸ் டி. சொய்சாவுடனும் அடுத்தமாதம் 4-ம் திகதி அச்சுவேலிக்கும் வருகிறார். அன்று நடக்கும் கூட்டத்தில் வட மா நிலக்கல்வி அதிபதி திரு. எஸ். தணிகாசலம் உட்பட பல கல்வியதிகாரிகளும் கலந்து கொள்வர். அன்றையதினம் திரு. குலதுங்க வடபகுதியிலுள்ள சகல பௌத்த பாடசாலைகளுக்கும் விஜயம் செல்வார்.

---

மதுரை, ஆகஸ்ட். 29

சென்ற சனிக்கிழமையன்று மதுரையில் காங்கிரஸ்கட்சியின் முன்னாள் தலைவர் காமராஜுக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக 5 காங்கிரஸ் காரர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை ஜில்லா காங்கிரஸ் உறுப்பினர்களான வே. சௌந்தரராஜன், ஏ. கே. ஏ. முருகையா, 4-வது சர்க்கிள் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் எம். எல். தாஸ், வார்டு இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர்கள் மாரிமுத்து, ஆறுமுகம் ஆகிய ஐந்து பேர்களுமே காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கப் பட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'அபிப்பிராயங்களில் வித்தியாசம் இருக்கலாம்; அது பகைமையல்ல. — மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 14-ந் திகதி (30 - 8 - 69)

## காங்கிரஸ் காரியக்கமிட்டித் தீர்மானம்

திரு. கிரி இந்தியக் குடியரசின் 4-வது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் அவரைப் பாராட்டி நாம் இப் பத்தியில் எழுதிய தலையங்கத்தில், ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து விட்டதால், காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்கிடையில் தோன்றிய கருத்து வேற்றுமைகளுக்கு ஒரு முடிவு கண்டு காங்கிரசின் ஒற்றுமையையும் நாட்டின் தேசிய ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்ற முன்வரவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். ஜனாதிபதி தேர்தலின் பின் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி, காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளை நீக்கிக் கொண்டு, காங்கிரசின் ஒற்றுமையையும் தேசத்தின் ஒற்றுமையையும் நிலைநாட்டுவதெனத் தீர்மானித்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்; காங்கிரஸ் தலைவர்களைப் பாராட்டுகிறோம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றியது. இரண்டு தீர்மானங்களிலுமுள்ள முக்கிய அம்சம் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் சரி 'சின்டிகேட்' எனப்படும் காங்கிரஸ் மேலிடத்து 'பஞ்சவர்களும்' சரி தங்கள் தவறுகளை ஒப்புக் கொண்டிருப்பதுதான். மனிதன் தவறு செய்வது இயல்பு. தவறை உணர்ந்து கொண்டால் அதுவே அவன் திருந்திக் கொள்வதற்குப் போதும். காங்கிரஸ் தலைவர்களும் தங்கள் தவறுகளை இதற்கு யார்காரணம், யார் தூண்டிவிட்டது, எப்படி ஏற்பட்டதென்று ஆராய்வதிலும் பிரச்னைகளையும் கருத்து வேறுபாடுகளையும் வளர்த்துக் கொள்வதிலும் தங்கள் நேரத்தைச் செலவிடாமல், கருத்து வேறுபாடுகளுக்கு ஒரு முடிவு காணவும் காங்கிரஸின் ஐக்கியத்தையும் நாட்டின் ஒற்றுமையையும் பாதுகாக்க பெருந்தன்மையுடன் முன்வந்தது, இந்திய நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும் இந்திய மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து உணர்ந்து செயலாற்றவும் காங்கிரஸ் இன்னமும் தகுதியுடையதாக இருக்கிறதென்பதை உறுதிப் படுத்துகிறது. காங்கிரஸ் இல்லாமல் இந்தியா இருக்க முடியாது என்ற நிலை இல்லையென்றாலும் மக்களை ஒன்று சேர்த்து, பெரும் போராட்டங்கள் நடந்தி, அரும் பெரும் தியாகங்கள் பல புரிந்து இந்திய நாட்டுக்கு விடுதலை தேடித்தந்த காங்கிரஸ் இந்திய நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டைப் பேண இன்னமும் ஆற்றல் பெற்றிருக்கிறதென்பதுஊர்ஜிதமாகியிருக்கிறது

காங்கிரஸ் தலைவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதுகூட ஓரளவுக்கு நல்லதாகவே தோன்றுகிறது. ஏனெனில் எதிர்க்கட்சிகள் என்றால் எதையும் எதிர்ப்பதென்றும் தாம் எதிரிக்கட்சிகள் தானென்றும் ஜனநாயக நாடுகள் பலவற்றிலும் ஒரு தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மைதரக்கூடிய எந்தத் திட்டங்களையும் யோசனைகளையும் முயற்சிகளையும் எதிர்க் கட்சிகளும் ஆதரித்து ஒத்துழைக்கலாமென்பதற்கு திருமதி இந்திராகாந்தியின் பொருளாதாரத் திட்டத்துக்கு எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்திருப்பது தகுந்த உதாரணம். இந்த ஒன்றே இந்திய தேசிய காங்கிரஸ் முன்னையவிட மேலும் பலம் பெற்றிருப்பதற்குப் போதிய சான்றும். ஜனநாயகம் மேலும் மேலும் வளர்வதற்கும் இது நல்ல அறிகுறி.

# இசை அரங்கேற்றம்

# "எல்லோருமே தவறு செய்துவிட்டோம்" -காங்கிரஸ் ஞானோதயம்

## நெருக்கடி கற்பித்துள்ள அரசியல் பாடம்

பிரதமர் இந்திரா காந்தி பெரிய தவறுசெய்துவிட்டதாகவும் அவர்மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் முழங்கிய காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா, முடிவில் அவ்விதமெதுவும் செய்யவில்லை இதற்கு மாறாக, தாம் உள்ளிட்டு எல்லாருமே தவறு செய்துள்ளதை காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மான மூலம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்!

''சென்ற சில வாரங்களிலே கருத்துக்களிலும் செயல்முறைகளிலும் முரண்பாடுகள் ஏற்பட்டபின் எல்லாப்பக்கங்களிலும் தவறுகள் செய்யப்பட்டுவிட்டன, இதைப்பற்றி ஆத்மசோதனை செய்யவேண்டும்'' என்று காங்கிரஸ் தீர்மானம் ஒப்புக் கொண்டிருப்பது பெரியகாரியம். குற்றம்சாட்டியவர்களே, தாங்களும் குற்றவாளிகளென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரசியலில் மட்டுமல்ல குடும்பம் முதலிய எல்லாத் துறைகளிலும் பிறர்மீது குற்றம் சுமத்துவதும், தாங்கள் எப்போதும் சரியென்றும் நினைப்பது சர்வ சகஜம். ஒருவர் தாம் செய்த தவறை எப்போது உணர்கின்றாரோ அப்போதே அவருக்கு உண்மையில் நல்லகாலம் பிறந்துவிட்டதென்று அறிஞர் கூறுவர்.

0 0 0

ஜனாதிபதி தேர்தலிலே காங்கிரஸ் கட்டளையை மீறி பிரதமர் இந்திராகாந்தி, ஸ்ரீ கிரியை ஆதரித்தது சரியா? காங்கிரஸ் அபேட்சகரான சஞ்சீவிரெட்டியைத் தோற்கடித்து, அவருக்கு எதிராகப் போட்டியிட்ட கிரியை வெல்லும்படி செய்துவிட்ட இந்திராவை காங்கிரஸ் எப்படி மன்னிக்கமுடியும்? இவ்விஷயத்தில் காங்கிரஸ் தலைவரும் அவரது சகாக்களும் என்ன தவறுகள் செய்தனர்? எல்லாப்பக்கத்தினரும் தவறுகள் செய்துவிட்டதாக காங்கிரஸ்தீர்மானம்கருதுவதேன்? என்பன முக்கிய கேள்விகள்.

ஜனாதிபதி தேர்தலிலே காங்கிரஸ் அபேட்சகரான சஞ்சீவிரெட்டி வெற்றி பெற்றிருந்தால் இன்று இந்திராவின் நிலைமை எப்படி இருந்திருக்கும்? சமரச தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றியிருக்குமா? இந்திரா ஆதரித்த சுயேச்சை அபேட்சகரான கிரி வெற்றிபெற்றதால்தான் இன்று காங்கிரசும் இச்சமரச தீர்மானத்தைச் செய்தது. இந்திராவின் அரசியல் எதிரிகளும் அடங்கி ஒடுங்கி விட்டார்கள். வெற்றியைப் போல் வெற்றி பெறுவது எதுவுமில்லை என்ற ஆங்கில வசனம் உண்மையாகிறது.

0 0 0

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்ட் ஆலோசனைக் குழுவிலே மொத்தம் 8 மெம்பர்கள் அவர்களில் ஐவர் திரு சஞ்சீவிரெட்டியை ஆதரித்தனர். பிரதமர் இந்திராகாந்தியின் பக்கம் மூன்றேபேர். அவர் வரு பெயரை பிரேரித்தார். இரண்டு அதிகப்படி வாக்குகள் சஞ்சீவிரெட்டிக்குக் கிடைத்ததால், காங்கிரஸின் சார்பாக அவர் ஜனாதிபதி தேர்தலுக்கு அபேட்சகராக நிறுத்தப்பட்டார். அதாவது இந்த ஐவரும் தாங்களே காங்கிரஸ், காங்கிரஸேதேசம் என்று தவறாக நினைத்துக்கொண்டார்கள்.

வங்கிகளை தேசியமயமாக்கியதற்காக பிரதமர்மீது பழிவாங்கவே அவர் கூறிய பெயரை, 'ஸிண்டிகேட்' என்று சொல்லப்படும் ஐவர் கோஷ்டியினர் எதிர்த்து, ரெட்டியாரின்பெயரை பிரேரித்ததாகச் சொல்லப்படுகிறது. கட்சியின் நன்மையைப் பாதுகாக்கவேண்டிய நிஜலிங்கப்பாவுக்கும், தேசிய நன்மையைப் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்புள்ள பிரதமர் இந்திராவுக்கும், நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டியிருக்க, இம்முக்கிய விஷயத்தில் வேற்றுமை ஏற்பட்டது பெரிய துரதிருஷ்டம்.

[அரன்]

கருத்துவேற்றுமைஏற்பட்டதும், காங்கிரஸ் இவ்விஷயத்தில் கட்சி, கட்டுப்பாட்டை வற்புறுத்தாமல் அவரவர் இஷ்டம்போல் வாக்களிக்க அனுமதியளித்திருந்தால், இவ்வித பெரிய நெருக்கடியும், அவமானமும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

உபஜனாதிபதி பதவி வகித்தவர்களே இதுவரை ஜனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். அதுபோல் இம்முறையும் உபஜனாதிபதியாக இருந்த கிரியை ஏன் காங்கிரஸ்தலைவர் உள்ளிட்ட 'சின்டிகேட்' ஒதுக்கியது கிரி செய்த குற்றம் என்ன? அதைப்பற்றி காங்கிரஸ் மேலிடம் இதுவரை விளக்கம் எதுவும் தரவில்லை.

கிரி அவர்களை காங்கிரஸ் மேலிடம் ஒதுக்கியதும் ஒரு விதத்தில் நன்மையே. அவரை தன் அபேட்சகராக காங்கிரஸ் நியமித்திருப்பின் மற்ற எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் அவர் பெற்றிருக்க முடியாது இந்தியாவைப் போன்ற பெரிய ஜனநாயக நாட்டிலே ஜனாதிபதியாக வருபவர் எந்தக் கட்சியின் சார்பாகவும் போட்டியிடாமல் சுயேட்சையாகப் போட்டியிடுவதுதான் பலவிதங்களிலும்நல்லதாகும் கட்சி சார்பாகப் போட்டியிட்டால் முதலிலேயே அவருக்குப் பல அரசியல் விரோதிகள் ஏற்பட்டுவிடக்கூடும். அவர் காங்கிரசிலிருந்து விலகி சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றதால் அவருக்கு இன்று அரசியல் விரோதிகளே இல்லை என்றும் கூறலாம்.

அமெரிக்காவிலே ஜனாதிபதி தேர்தலில் கைக்கொள்ளும் முறையை இந்தியாவும் பின் பற்றவேண்டிய அவசியமில்லை, இரு நாடுகளிலும் ஜனாதிபதிப் பதவிவகிப்பவர்களின் பொறுப்பும் கடமையும் வெவ்வேறு மேலும் அமெரிக்காவும் ஜனாதிபதி பதவியை கட்சிப் போட்டியிலிருந்து அகற்றுவதாயின் கென்னடி போன்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள். நாட்டிலுள்ள எல்லா பொதுமக்களுக்கும் அதிபர் உரியவராக இருப்பதுதான் நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கும் நல்லதாகும்.

கிரி அவர்களின் தேர்தல் வெற்றி இந்திய அரசியல் தலைவர்களுக்கு நல்லதோர் பாடமாகும். இனி கட்சிச் சார்பாக ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடாமலிருப்பதுடன் பிரதம மந்திரியின் கருத்தை செவிசாய்த்து அவருடன் ஒத்துழைக்கக்கூடிய ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதே பலவிதங்களிலும் மேலாகும்,

இவ் விதத்தில் பார்ப்பின் பிரதமர் இந்திரா காந்தி காங்கிரஸ் கட்டளையை மீறியதற்காக நாடும் காங்கிரசும்கூட அவருக்கு கடமைப்பட்டுள்ளது. இன்று காங்கிரசுக்குப் புத்துயிர் அளித்தவரும் இந்திராவேயல்லவா?

காங்கிரஸ் பிளவு பட்டு இந்தியா அமைதியிழந்து குட்டிச்சுவராகி விடுமென்று எதிர் பார்த்தவர்களுக்கு இப்போது ஏமாற்றம்தான். 'சத்யமேவ ஜயதே' (உண்மையே வெல்லும்) என்ற மந்திரத்தை லட்சியமாகக் கொண்டுள்ள இந்தியா எப்படியும் காப்பாற்றப்படும் என்பதற்கு இது பெரியதோர் அத்தாட்சி.

# தமிழின் பெருமையை உலகறியச் செய்த ஞானப்பிரகாச சுவாமிகள்

## இன்று அவரது நினைவு தினம்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மறைந்து இற்றைக்கு 22 வருடங்களாகின்றன. அவர் தைத் திங்கள் 22-ம் நாள் 1947ஆம் ஆண்டு அமரரானார். அவர் பூதவுடம்பு மறைந்து அழி

எதற்கும் அஞ்சாத நெஞ்சமும், உறுதியும், நேர்மையும் இவரது எல்லாவித கருமங்களுக்கும் துணைநின்று உதவின. மொழியின் ஆர்வத்தினால் பலவேறுமொழியின் ஆர்வத்தினால் பலவேறு மொழிகளையும் கற்கவேண்


திங்கள் 30-ம்நாள்பிறந்தார் பெற்றெடுத்தோர் பேரன்போடு இட்டபெயர் ''வைத்தியலிங்கம்'' ஆனால் சைவ சமயத்தவரான சுவாமியார் பின்னர் கத்தோலிக்க மறையில் சேர்ந்து காலத்தால் அறியப்பட்டுப் புகழப்பட்ட

படிப்பு முடிந்ததும் சிறிது காலம் இலங்கைப் புகையிரத சேவையில் சேர்ந்து கடமையாற்றிய பின்னர் குருமடத்தில் சேர்ந்து 1901-ம் ஆண்டு கிறீஸ்துவின் குருவானார். இதன் பின்னர் தான் சுவாமியார்

இவரது தமிழ்ப்பணியில் சிறந்ததும்போற்றக்கூடியதுமானது சொற் பிறப்பு ஒப்பியல்அகராதியாகும் சுவாமியார் தமது காலத்தில் ஆறு பாகங்களை மட்டும் செய்ய முடிந்தது தொடர்ந்து முழுவதையும் செய்யுமுன்னரே அவர் வாழ்க்கை முற்றுப் பெற்றுவிட்டது ஆனால அன்னார் விட்டுச்சென்ற பணியை கலாநிதி ஹ சி தாவீது அடிகளார் தொடர்ந்து செய்கிறார் இவ்வருட இறுதியிலேயே சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் 7-ம்பாகம் வெளிவரஇருக்கின்றது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் தொண்டும் தேவ தொண்டும் தமிழ்மக்கள் உள்ள அளவும், தமிழ்

முழுரக உற்பத்திகள்
சிலோன் பெயின்ட் இன்டஸ்றீஸ் லிமிட்டட்
தயாரிப்புக்கள்.




ரோபியலக்
அக்றைலிக் இமல்ஸன்

ரோபியலக்
சுப்பர் குலொச் இனமல்

ரோபியலக்
பிரைட் அலுமினியம் பெயின்ட்

ரோபியலக்
றூபிங் பெயின்ட்

ரோபியலக்
ஒல் சேபஸ் பிறிமர்

ரோபியலக்
ரூேட் லயின் பெயின்ட்

ரோபியலக்
செல்லுயு லோச் வூட் பினிசஸ்

ரோபியலக்
ஹாமர் பினிஸஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளையும் வளர்த்துக் கொள்வதிலும் தங்கள் நேரத்தைச் செலவிடாமல், கருத்து வேறுபாடுகளுக்கு ஒரு முடிவு காணவும் காங் மேலும் பலம் பெற்றிருப்பதற்குப் போதிய சான்றாகும். ஜனநாயகம் மேலும் மேலும் வளர்வதற்கும் இது நல்ல அறிகுறி.

# இசை அரங்கேற்றம்

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று சுப்பிரமணிய பாரதியார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு பாடி வைத்தார். இன்று அந்த மகாகவி இருந்திருப்பாராளுல் 'மாதர் தம்மை மகிமை செய்யும் மகத்துவத்தை வாழ்த்துவோம்' என்று நிச்சயமாகப் பாடியிருப்பார்.

ஏன்? பாருங்கள், இன்று எத்தனை துறைகளில் மாதர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஆண்களோடு பெண்களும் சமானமாக உத்தியோகம் பார்க்கிறார்கள். ஆண்களைவிடக் கெட்டித்தனமாகவும் வேலை செய்கிறார்கள். ஒரு நாட்டின் தலைவாராகவும், ஒரு பெரும் முக்கியமான தாபனத்தின் தலைவராகவும் பெண்கள் கடமையாற்றி வெற்றிகரமாகத் தொண்டு செய்து வருகிறார்கள்.

இவ்வளவும் எழுத வேண்டியது ஏனென்றால், நமது ஈழநாட்டிலே பெண் மக்கள் இசைத்துறையிலும் மேம்பட்டு விளங்கி வருவதே!

மாதாமாதம் பார்த்தால் எங்கும் இசை அரங்கேற்றங்கள்! நூற்றுக்கு தொண்ணூறு பேர் இளம் நங்கையர்கள். பெண்கள் இயல்பிலேயே மென்மையான உள்ளம் படைத்தவர்கள். சங்கீதம் மென்மையானது. ஆகையினுலே அவர்களுக்கு சுயமாக இசை அனுபவம் உண்டாவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

0 0 0

செல்வி சுப்பிரமணியம் இராசரத்தினத்தின் இசை அரங்கேற்றம் சென்ற 22-ம் திகதி தொல்புரம் வழக்கம்பரை அம்மன்கோயில் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ஆபோகிவர்ணத்துடன் ஆனந்தமாக ஆரம்பித்த கச்சேரி ஸ்ரீ கணபதி என்ற தியாகராஜ கிருதியுடனேயே களைகட்டிவிட்டது. 'பாஹிமாம்ஸ்ரீ', 'சிவகாமசுந்தரி', 'பரமாத்முடு', 'எந்த நேர்ச்சினு' முதலிய உருப்படிகள் மிகவும் நேர்த்தியாக அமைந்திருந்தன. செல்வி இராசரத்தினம் 'கமலாம் பஜரே' என்ற தீக்ஷிதர் கிருதியைப் பாடும்போது தமது முழுவல்லமையையும் காட்டினார். எனக்கருகாமையில் இருந்து கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்த கலையரசு சொர்ணலிங்கம் 'வெரி பவர்புல் வோயிஸ்' என்றார். நானும் அதைப் பரிபூரணமாக ஆமோதித்தேன். கணீர் என்று பேசும் காத்திரமான சாரீரம் செல்வி இராசரத்தினத்துக்குண்டு. அதை அவர் நன்றாக வளம்படுத்தி வருவார் என நம்புகிறேன். அடுத்து இந்தோளத்தில் பாபநாசம் சிவனின் 'மாரமணன்' கீர்த்தனையைப்பாடினார்கள். காம்போதி இராக ஆலாபனையும் சதுஸ்ரஜாதி திரிபுடையில் அமைந்திருந்த 'உனது பாதம் துணையே' என்ற பல்லவியும் மிகக்கச்சிதமாக அமைந்திருந்தன.

இன்னும் முன்னேறவேண்டிய பக்குவங்கள் செல்வி இராசரத்தினத்திடம் காணப்படுகின்றன. சங்கீத ரத்தினம்' பட்டம் பெற்ற இவர் மேலும் இசைப் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

இவருடைய பிரதம ஆசிரியரான திரு. ஐயாக்கண்ணு தேசிகரைப் பற்றி ஒரு வார்த்தை கூற வேண்டும். தேசிகர் அவர்கள் சிறுபிராயத்திலேயே நவாலி அட்டகிரியிலுள்ள குருக்கள் மடத்திலிருந்து சங்கீத பரீட்சை செய்தவர். அவருடைய தந்தையர் திருஞானசம்பந்தக் குருக்கள் நவாலி வட்டாரத்தில் இசைப்பயிற்சி அளிப்பதில் தொண்டாற்றியவர். ஐயாக்கண்ணு தேசிகர் தற்சமயம் 'இராமநாதன் அகடமி'யில் தமது குருநாதர் சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் கீழ் வாய்ப்பாட்டு ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

வழக்கம்பரை அம்மன் கோயிலில் அன்று ஏராளமான ரசிகர்கள் திரண்டிருந்து செல்வி இராசரத்தினத்தின் (இவருடைய கன்னியப்பெயர் தான் இராசரத்தினம்) கச்சேரியைச் சுவைத்து மகிழ்ந்து வாழ்த்துரை கூறினார்கள்.

— வி. என். பி.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு [illegible] 30- [illegible]

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மறைந்து இற்றைக்கு 22 வருடங்களாகின்றன. அவர் தைத் திங்கள் 22-ம் நாள் 1947ஆம் ஆண்டு அமரரானார். அவர் பூதவுடம்பு மறைந்து அழிந்து விட்டது. ஆனுல் புகழுடம்போ தமிழ்கூறும் நல்லுலகம் உள்ளவரை, தமிழ் உள்ளவரை என்றும் அழியாது. ஏனெனில் அவர் மூச்சே தமிழாய் இருந்தது தமிழ்மொழியின் சிறப்புக்காக, தமிழ் அன்னையின் வளர்ச்சிக்காக, எவ்வளவோ ஆராய்ச்சிகளை, சிந்தனைகளைச் செய்தார், சிறப்புடன் செய்தார்! தமிழ் மொழியின் பிறப்பை, வனப்பை, வளர்ச்சியை தமிழ் மக்கள் மட்டுமல்ல அகில உலக மக்களும் அறியவும், போற்றவும் வைத்தார். ஒரு மொழியை அதைப் பேசும் மக்களால் மட்டும் சிறப்பிக்க முடியாது, ஏனைய மக்களும் அறிந்திருந்தால் தான் புகழ்பரவும் என்ற கொள்கையுடையவர்.

### சமயத்துறவி

சுவாமி ஞானப்பிரகாசர் இத்துணைப்புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக இருப்பதற்கு காரணம் தம்மை முழுவதும் சமயத்தொண்டு புரிவதற்கு அர்ப்பணஞ் செய்ததாகும். சமயத்துறவியாக இருந்து கொண்டு சமயத்துக்குப் பெருந்தொண்டாற்றிவரும் நாளிலேயே தமிழ் அன்னைக்கும் அளப்பருஞ் சேவை செய்தார். இல்லறத்தோரைக் காட்டிலும் துறவறத்தோருக்குக் கிடைக்கும் வசதிகளும் வாய்ப்புக்களும் சுவாமியவர்களை மொழி ஆராய்ச்சி, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளைத் தனி நிகரோடு செய்யவைத்தது.

### சுவாமிகளின் சொற்திறன்

சுவாமியார் காலத்திலே நிலவிவந்த சமய தர்க்கப் பிரசங்கத்துக்கு நிகர் அவரே தான். எங்கே சுவாமியார் அவர்கள் தர்க்கப் பிரசங்கம் நிகழ்த்தப்போகிறார். என மக்கள் அறிந்துவிட்டார்களோ அங்கே கூட்டம் பெருகிவிடும். அவ்வளவு சொற்சிறப்போடு, ஆழமான கருத்தோடு, சிந்தையைக் கிளறும் சீரிய எண்ணங்களோடு தர்க்கப் பிரசங்கம் நடத்துவார். இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் சுவாமியாரின் பிரசங்கங்களைக் கேட்கவும், கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் அறியவும் மருதமடுவிற்குத் திரண்டுவருவார்கள்.

எதற்கும் அஞ்சாத நெஞ்சமும், உறுதியும், நேர்மையும் இவரது எல்லாவித கருமங்களுக்கும் துணைநின்று உதவின. மொழியின் ஆர்வத்தினுல் பல்வேறுமொழியின் ஆர்வத்தினுல் பல்வேறு மொழிகளையும் கற்கவேண்டும் என்ற நியதிக்கு அல்ல. அம்மொழிகளின் சிறப்புக்களை அறியவேண்டும் என்ற பேராவலோடு கற்றார். சுவாமியாரவர்கள் ஏனைய சமயக் குரவர்களைப் போன்று வெளிநாடுகளுக்குச் செல்லவும், அங்கே ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் வசதியுடையவராக இருந்திருப்பாராகில் அன்னாரது சேவை மேலும் மேலும் சிறப்படைந்திருக்கும். ஆனுல் இத்தகைய வசதிகளை ஒழுங்குகளை, உத்தரவுகளை இவரது சமய மேலதிகாரிகள் இவருக்கு வழங்கவில்லை. சுவாமியாரவர்கள் தமிழகம் மட்டும் சென்று வந்தார். இத்தனைக்கும் அவர் காலத்தைக் கடுத்துடன் செலவிட்டு ஆராய்ச்சிதுறைகளில் மேலும் மேலும் உயர்ந்து விளங்கினார்.

### ஜேர்மனி கௌரவித்தது

அன்னாரது மொழி, சரித்திர ஆராய்ச்சிகளை ஊன்றி நோக்கி ஜேர்மனிய மக்கள்

ஆசிரியர்

## மோ. தார்இசியஸ்

அவரைப் பெரிதும் கௌரவித்தார்கள். ஈழத் தமிழ் மகனுன சுவாமியாரவர்களின் திருஉருவப் படத்தைத் தாங்கிய தபால் முத்திரையையே வெளியிட்டார்கள். இக் கௌரவம் எந்தத் தமிழனுக்கும், அதுவும் வெளிநாட்டில் கிடைக்கவில்லை. இத்தகைய கௌரவத்தைப் பெற்ற ஒரே ஒரு தமிழ் மகன் இவரேயாகும்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் பொழுது இவர் நல்லூரைப் பிறப்பிடமாகவோ, வளர்ந்த இடமாகவோ கொண்டவரல்ல. ஆனுல் நல்லூரைத் தமது உழைப்பிடமாக, சேவைக்களமாக, ஆராய்ச்சி நிலையமாகக் கொண்டவர். நல்லூர் அவர் வாழ்க்கையை உயர்த்தியது. இவரது பிறப்பிடமோ மானிப்பாயாகும் இவர், அக்காலத்தில் புகழோடு விளங்கிய புவிராசசிங்கக் குலசேகர முதலியார் வழித்தோன்றலாகிய திரு. சாமிநாத பிள்ளை உபாத்தியாயரதும், மேற்படி யூர் காடினர் சிற்றம்பல உபாத்தியாயரது புத்திரி தங்கமுத்து வினதும் மகனுய் 1875-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 30-ம்நாள்பிறந்தார் பெற்றெடுத்தோர் பேரனோடு இட்டபெயர் ", வைத்தியலிங்கம்'' ஆனுல் சைவ சமயத்தவரான சுவாமியார் பின்னர் கத்தோலிக்க மறையில் சேர்ந்து காலத்தால் அறியப்பட்டுப் புகழப்பட்ட பெயர், 'ஞானப்பிரகாசர்' ஆரம்பக் கல்வியை மானிப்பாயில் பெற்ற சுவாமியார், பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது படிப்பைத் தொடர்ந்தார். படிப்பு முடிந்ததும் சிறிது காலம் இலங்கைப் புகையிரத சேவையில் சேர்ந்து கடமையாற்றிய பின்னர் குருமடத்தில் சேர்ந்து 1901-ம் ஆண்டு கிறீஸ்துவின் குருவானுர். இதன் பின்னர் தான் சுவாமியார் தேவ தொண்டோடு தமிழ்த் தொண்டும் செய்யத் தொடங்கினர். களார் தொடர்ந்து செய்கிருர் இவ்வருட இறுதியிலேயே சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் 7-ம்பாகம் வெளிவரஇருக்கின்றது.

நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் தமிழ் தொண்டும் தேவ தொண்டும் தமிழ்மக்கள் உள்ள அளவும், தமிழ் உள்ள அளவும் நிலைத்திருக்கும் வாழ்க சுவாமி ஞானப் பிரகாசர் வளர்க தமிழ் மொழி.

## சின்ன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் இம்மாதம் 18-ந் திகதி கூ. மொ. வி. நிலையத்திலிருந்து அந்தச் சங்கத்துக்குக்கிடைத்ததந்தியில் இரண்டுதினங்களுக்கு வெங்காய ஏற்றுமதியைக் குறைக்கும்படி தெரிவித்திருந்தனராம். இதன்பின் அடுத்த நாள் வந்த தந்தியில் வெங்காய ஏற்றுமதியையே மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்திவைக்கும்படி உத்தரவிடப்பட்டிருந்ததாம்.

இதைத் தொடர்ந்து இச்சங்கத்தின் காரியதரிசி திரு. கு. கணேஷ் கொழும்புக்குச் சென்று உணவு இலாகா அதிகாரிகளுடனும் உணவு அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் பயனுக கொழும்புக்கு நிறுத்தப்பட்டிருந்த சின்ன வெங்காய ஏற்றுமதி மீண்டும் சிறிதுகுறைவாக வேனும் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

பம்பாய் வெங்காய இறக்குமதிதான் சின்னவெங்காயம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கு இடையூறு ஏற்படக் காரணமெனக் கூறப்படுகிறது. இதேசமயம் ஆடி மாதத்தில் சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலையைக் குறைக்கும் முறையில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் பம்பாய்வெங்காய இறக்குமதி கட்டுப்படுத்தப்படலாம் என்பதை உணவு அமைச்சு பரிசீலனை செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், சனி

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்க விளையாட்டு மைதானம் திருத்தும் வேலை கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. க. பரமானந்தராசா தலைமையில் சிரமதானம் மூலம் செய்யப்பட்டது. நூற்றுக்குமதிகமான அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். மங்கையர் கழகம் முதல் நாள் மதிய போசனம் வழங்கியது. சிரமதானம் தொடர்ந்து நடைபெறுமென்றும், பல அங்கத்தவர்கள் மதிய போசனம் வழங்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

# காந்தி வழியில் செல்ல கிரி

பாரத ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. வி. வி. கிரிஇந்தியக்குடியரசின் தூதுவராக இலங்கையில்இருந்தபொழுது 1950ம் ஆண்டு யாழ் மாநகரில் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். மகாத்மா காந்தி காட்டிய பாதையில்சென்று புகழ் பெற்ற திரு. கிரியவர்கள் காந்திய போதனைகளிலிருந்து என்றுமே விலகியது கிடையாது.

1950ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் நாள் அரியாலை மேற்கில் வதியும் ஹரிஜனமக்கள் மத்தியில் காந்திஜிக்கு ஞாபகார்த்த மண்டபம் ''சாந்தி நிலையம்'' காந்தியவாதியான திரு. கிரியால் திறந்து வைக்கப்பட்டது. இது அரியாலை மேற்கில் வதியும் ஹரிஜன மக்கள்வரலாற்றில் மறு மலர்ச்சியை ஏற்படுத்திய வரலாற்று முக்கியத்துவமுடைய சம்பவமாக அமைந்தது.

அன்று நடைபெற்ற இப் பிரமாண்டமான நிகழ்ச்சிக்கு அப்போது யாழ் மாநகரபிதாவாக இருந்த திரு. க. பொன்னம்பலம் தலைமை தாங்கினர். ஹரிஜனமக்களின் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறையுடைய திரு. கிரி, இக் கட்டிடம் கட்டுவதற்கு காந்திய ஞாபகார்த்த நிதியிலிருந்து ரூபா 3000 இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தந்தார். இந் நிதியே காந்திநிலைய கட்டிடத்திற்கு மூல நிதியாக அமைந்தது.

மகாத்மாஜியின் நூருவது ஆண்டுவிழா நடைபெறும் இவ்வாண்டிலே திரு. கிரி ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது மிகவும் பொருத்தமுடையதே

சு ஆறுமுகம்
அரியாலை மேற்கு
காந்திநிலையதலைவர்

## நாடகம்

நாவற்குழி, சனி

நாவற்குழி சரஸ்வதி சனசமூகநிலையத்தின் ஆதரவில் நடிகமணி வி. வைரமுத்து கோஷ்டியினரின் சம்பூர்ண அரிச்சந்திரா நாடகம் இன்று நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மேடையேறுகின்றது.

## உயிருடன் இருக்கிருர்கள்

லண்டன், ஆக 29

வடகொரியா சுட்டு வீழ்த்திய அமெரிக்கா ஹெலிஹாப்டரிலிருந்த மூவரும் உயிருடனிருப்பதாக வடகொரியா அறிவித்துள்ளது.

## விற்பனைக்கு

புளியங்கூடல் சந்தியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் இரும்புப் பெட்டியொன்று (Iron Safe-With Stand) விற்பனைக்குண்டு. கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். நாகராசா, தலைவர். 1357

## மரண அறிவித்தல்

ஏ. டபிள்யூ. இராசசேகரம்

(முன்னுள் அதிபர், பரி. யோவான் கல்லூரி)

அன்னுரின் பூதவுடல் அவரின் ஸ்டேஷன் வீதி இல்லத்திலிருந்து 30-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பரி. யோவான் கல்லூரி மண்டபத்திற்குக் கொண்டுசெல்லப்படும். அங்கு 4 மணிவரை மக்கள் மரியாதை செய்வார்கள். அங்கிருந்து நல்லூர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. 1726

செல்லுயு லோச்
லூட் பினிசஸ்

ரோபியலக
ஹாமர் பினிஸஸ்

ரோபியலக்
ஈபொக்ஸி பினிஸஸ்

ரோபியலக்
வுலோர் கோட்டிங்ஸ்

ரோபியலக்
குலோறினேட்டட்
றபர் பெயினட்

ரோபியலக்
குரோமேட் பிறிமர்

ரோபியலக்
ஓயில் பிறிமர்

ரோபியலக்
மெட்டல் பிறிமர்

ரோபியலக்
இன்டஸ்ரியல் இனமல்ச்

ரோபியலக்
அன்டை-பன்ஷெஸ் வோஸ்

பேஸாகிறைல்
அஹ்றைலிக்
ஒட்டோமட்டிக் பினிசஸ்

நீஜன்ட்
பிறிபியட் பெயின்ட்ஸ்

நீஜன்ட்
பிட்டு மின்னஸ் பெயின்ட்

இப்பொழுது 2-ம் பக்கம் திருப்பி ரோபியலக் குடும்பத்தின் புதிய அங்கத்தவரைச் சந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org